Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(சி - 764)
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 17 (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :199

# திருமலை ஜமாலியா பகுதிக்கும் நேற்றிரவு வன்முறை பரவியது!

### விண்ணாணம் விநாசியர்



உவர் ஹக்கீம் மிரட்டவும் - அவர் ரணில் மிரளவும் சோக்கான அரசியல்தான்!

## மோதல்களில் 9 பேர் காயம்; நகரில் ஊரடங்கு அமுலானது

(திருமலையிலிருந்து சசிக்குமார், கீதபொன்கலன்)

**மூதூரில் கடந்த சில தினங்களாகக் உருவாகியிருந்த தமிழ் - முஸ்லிம் பகுதியினரிடையேயான வன்முறை, நேற்றிரவு திருகோணமலை நகருக்கும் பரவியது. நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 9 பேர் காயமடைந்தனர். இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. பதற்றம் அதிகரித்ததால் நகரில் பொலிஸ் ஊரடங்கு நேற்றிரவு பிறப்பிக்கப்பட்டது.**

நேற்றிரவு 8.30 மணியளவில், திருமலை ஜமாலியா நகரில் வீதியில் சென்று கொண்டிருந்த தமிழ் மக்கள் மீது, முஸ்லிம் குழுவொன்று கைக்குண்டு வீசியதில் 7 தமிழர்கள் காயமடைந்தனர். இதில் ஒருவர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜமாலியா நகர வீதிகளில் - முஸ்லிம் கும்பல்கள் கத்திகள், பொல்லுகளுடன் ஆவேசமாகத் திரிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், ஜமாலியா நகரை அண்டிய திருக்கடவூர், மூன்றாம்புரி பகுதித் தமிழ் மக்களிடையே பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதியிலிருந்து சில தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளன.

இதனிடையே - திருகோணமலை மத்திய வீதிப் பகுதியில் நேற்று நடைபெற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைச் சக்திகளை இனங்காண வேண்டும்

### திருமலை அரசியற்துறையினர் கோரிக்கை

மூதூர்ப் பகுதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் குறித்து - தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டுமெனவும், உண்மை நிலையை அறிந்து கொள்ளவேண்டும் என்றும் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறையினர் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளனர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இருவாரங்களுக்கு முன்னர் - இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக அறிந்தோம். இது தொடர்பாக, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும், முஸ்லிம் பள்ளிவாசல் (10 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் ரணில் திருமலை செல்வார்?

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்திக்க, பிரதமர் ரணில் திருகோணமலை செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலை முஸ்லிம்களின் பாதுகாப்பு, பிரதமரால் உறுதி செய்யப்படும்வரை, தாம் அங்கிருந்து வெளியேறப்போவதில்லை என அமைச்சர் ஹக்கீம் கூறிவருவதைத் தொடர்ந்தே பிரதமர் திருமலை வருகின்றார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிலைவரம் குறித்து இன்று மூதூரில் உயர் மாநாடு

மூதூரில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்தும், இயல்புநிலையை ஏற்படுத்தும் நோக்கிலும் உயர்மட்டப் பாதுகாப்புக் கூட்டம் இன்று மூதூரில் இடம்பெறுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் படையதிகாரிகள் இந்த உயர்மட்டக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இதேவேளை, தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இடம்பெற்றுவரும் மோதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக, நேற்றுமுன்தினம் காலை 6 மணியிலிருந்து இன்று காலை 6 மணிவரை ஊரடங்கு தொடர்ந்து அமுல்செய்யப்பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு வெற்றிவிழாவினை பெரியளவில் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுத் தளம் புலிகளால் கைப்பற்றப்பட்ட மூன்றாம் ஆண்டு நிறைவு வெற்றி விழா, எதிர்வரும் 28 ஆம் திகதி பளையில் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில், வட - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், திருமலை, வவுனியா, வன்னி ஆகிய பகுதிகளிலிருந்து பெருந்திரளான மக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது - தமிழீழ விடுதலைப் புலிகளின் சகல படைப்பிரிவுகளினது அணிநடைகளும், போர் முனைத் தளபதிகளின் கருத்துரைக (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழ் மாணவி சாதனை!



தென்கிழக்காசியாவின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழான பரீட்சையில், அமெரிக்காவில் வசித்துவரும் இலங்கைத் தமிழ்ப் பெண்ணான அமிர்தா ஹரிச்சந்திரன் (வயது 17), 1600 புள்ளிகளுக்கு 1600 புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஹவார்ட், கல்ரெக், ஸ்ரான்ட்போர்ட் பல்கலைக்கழகங்கள் இவருக்கு உயர்கல்விக்கான அனுமதியை வழங்க முன்வந்துள்ளன.

ஆனாலும் இது முக்கியமல்ல. தமிழர் போராட்ட விடயங்களுக்கு ஏதாவது செய்யவே நான் விரும்புகிறேன் என்கிறார் அமிர்தா.


## அரசிலிருந்து விலகமாட்டேன்; அமைச்சர் ஹக்கீம் அறிவிப்பு!

அரசாங்கத்திலிருந்து விலகும் நோக்கம் தற்போதைக்கு தன்னிடம் இல்லையெனவும், பிரதமர் ரணிலுடன் பேசி, பதற்றத்தைக் குறைக்கவே தான் விரும்புவதாகவும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மூதூரைவிட்டு திருமலைக்குப் புறப்படமுன்னர், செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில் -

அண்மையில் நடந்த பதற்றத்திற்கும், பிரச்சினைக்கும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளே காரணமாக அமைந்தன. முஸ்லிம் மக்களிடம் விசாரணை நடத்தவும் தலையிடவும் விடுதலைப் (10 ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் நமது ஈழநாட்டின் ஈஸ்ரர் வாழ்த்துக்கள்



### அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவாக

## பொது அமைப்புக்கள் இணைந்து நேற்று நல்லூரில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தீயாக தீபம் அன்னை பூபதியின் பதினைந்தாம் ஆண்டு நினைவின் இறுதிநாள் நிகழ்வுகள், நேற்று வடக்கு - கிழக்குப் பகுதிகள் எங்கும் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வினை, பொது அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் நடத்தியதுடன், அடையாள உண்ணாவிரதமும் இடம் பெற்றது.

முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி இராஜகோபால் தலைமையில், நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் - தேசியக் கொடியினை யாழ். கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றி வைக்க, பொதுச் சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரினை, அண்மையில் சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாம் பலமாக இருந்தாலே எமது உரிமையை பெறலாம்

### அன்னை பூபதி நினைவுக் கூட்டத்தில் பரா



இன்றைய சமாதானச் சூழ்நிலைக்கு எமது பலம்தான் காரணம். நாம் பலமாக இருந்தால்தான் நமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- இவ்வாறு நேற்றைய தினம் நல்லூரில் நடைபெற்ற அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவு விழாவில், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியைப் பயன்படுத்த கட்டுப்பாடு

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியைக் கையாளும், பயன்படுத்தும் சமயங்களில், கண்டிப்பான நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியைப் பயன்படுத்துவதற்கு முன்னர், அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் உரிய முறையில் முன்னனுமதி பெறப்பட வேண்டும்.

அவ்வாறு முன் அனுமதி பெறப்படாது, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதி பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அண்மைக்காலத்தில் - வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தத்தமது பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள், பெருமளவு நிதியைத் தமது பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கிவருகின்றனர்.

சில பாடசாலை அதிபர்கள், இலட்சக்கணக்கான ரூபா பணத்தைக்கூட, வலயக்கல்வி அதிகாரிகளின் அனுமதியின்றி துஷ்பிரயோகம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, மாகாணக் கல்வி அமைச்சினால் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டது. (100)

# மாநகரசபை ஊழியர் உதவியுடன் பசு மாடுகள் வெட்டப்படுகின்றன

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சில மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள், மாநகரசபை ஊழியர்கள் சிலரின் உதவியுடன் களவாகப் பசு மாடுகளை வெட்டுவதாக, யாழ்.மாவட்ட பசுவதைத் தடுப்பு பாதுகாப்புச்சங்கம், யாழ்.மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில், அன்றாடம் வெட்டப்படும் ஒவ்வொரு மாட்டுக்கும் ஒவ்வொரு பற்றுச்சீட்டு இறைச்சிக்கடைகளில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், கால்நடைகளைக் கொல்லத் தடைவிதிக்கப்பட்ட போயா தினங்களில், சில இறைச்சிக் கடைக்காரர்கள் இறைச்சி விற்பனை செய்வதாகவும் இந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கிணறு, மலசலகூடங்களுக்காக வீடுகளுக்கு வரும் படையினர்!

(அரியாலை)

அரியாலை - முள்ளி, நாவலடி, பொன்னம்பலம் வீதி போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளில் உள்ள மலசலகூடங்களையும், கிணறுகளையும், அவ்வீடுகளை அண்டியுள்ள இராணுவத்தினர் பாவித்து வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் இராணுவத்தினர் - இரவு, பகல் என்று பாராமல் சிலவேளைகளில் நள்ளிரவில் கூட இவற்றைப் பாவிக்க வருவதால், அப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களையும் இடையூறுகளையும் எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக, பெண்கள் பெரும் சங்கடங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர். (55)

## நிதி ஒதுக்கீடு

தும்பளை தெற்கு நாவலடி சக்தி அம்மன் ஆலயத்திற்கு கட்டடங்களை அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சு இரண்டு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. (23)

# பதவி வெற்றிடங்களிற்கான விண்ணப்பம் கோரல்

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் (நியாப்) 2003ஆம் ஆண்டின் செயற்பாட்டிற்கான தலைமைக் காரியாலயச் செயலணி அமைத்தல்

**- கிளிநொச்சி மாவட்டம் -**

மேற்படி செயலணிக்குத் தேவைப்படும் ஆளணி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட தகைமையும், அனுபவமும் உடைய விண்ணப்பதாரர்களை மட்டும், விண்ணப்பங்களைத் தயாரித்து பதிவுத் தபாலிலோ, அல்லது நேரிலோ பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடுவப்பணியகம், கண்டி வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அல்லது பணிப்பாளர், த.பு.கழகம், 82/1, கே.கே.எஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.04.2003 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை மேற்கூறிய முகவரிகளில் அமைந்துள்ள காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆளணி பற்றிய விபரங்கள்:-**

01. எழுதுநர்
02. கணக்கு எழுதுநர்
03. கணினி இயக்குநர்
04. காரியாலய சிற்றூழியர்
05. தொடர்பாளர்
06. படவரைஞர்

**சம்பளம் :-**

தமிழர் புனர்வாழ்வுக்கழக சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பள அளவுத்திட்டத்தில் தகைமை, அனுபவம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும்.

**வயதெல்லை :-**

22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட வயதெல்லையை கொண்டிருக்கும் ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகுதியான விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை பின்வரும் நாட்களில் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தவறாது சமுகம் கொடுக்கவும்.

01. கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு.
வைகாசி மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை (07.05.2003) காலை 9.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நடுவப் பணியகத்தில் நடைபெறும்.

02. யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு.
வைகாசி மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை (10.05.2003) காலை 10.00 மணிக்கு யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக காரியாலயத்தில் நடைபெறும்.

(315) ம/யோ.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சுருக்கெழுத்து, தட்டச்சு வகுப்புக்கள்

பாடசாலைகளை விட்டு விலகியோரின் நலன்களைக் கருத்திற்கொண்டு - வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் நடாத்தும் தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புக்கள் மே மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் கழகத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, மேலதிக விபரங்களையும் விண்ணப்பங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (116)

## மாவை இல்லத்தில் கலந்துரையாடல்

தந்தை செல்வாவின் 26 ஆம் ஆண்டு நிறைவு விழா ஒழுங்குகள் குறித்தும், மேதினம் குறித்தும் ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல், இன்று காலை 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதில், சகல கூட்டணி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வைக்கோல் ஏற்றிய உழவு இயநதிரத்தில் இருந்து தூக்கி எறியப்பட்ட சாரதியின் மீது, உழவு இயந்திரம் ஏறியதில் - அவர் காயமுற்ற நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வரணிப்பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், சண்டிலிப்பாயைச் சேர்ந்த தியாகராசா ஹரிகரன் (வயது 33) என்பவரே காயமடைந்தவராவார். (சு)

## சிறுவிளம்பரம்

**தவறிவிட்டது**

15-04-2003 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணியளவில் 750 பாதைச் சேவை மினிபஸ்ஸில் நெல்லியடிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பல்கலைக்கழக விரிவுரைக்குறிப்புகள், பிறப்பத்தாட்சிப்பத்திரம் மற்றும் ஆவணங்களுடன் ஓர் பாக் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வடமராட்சி சிற்றூர்தி சங்கத்திடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். க.ருகுணன், நெல்லியடி, கரவெட்டி. (சி-859)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30
(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)

# சட்டவிரோத மண் அகழ்வு அரியாலையில் தொடர்கிறது

அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதிகளில் இருந்து அதிகாலை வேளைகளிலும், இரவு வேளைகளிலும் உழவு இயந்திரங்களின் மூலம், சட்டவிரோதமாக மண் அள்ளப்படுவது இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

மேற்படி பகுதிகளில் அண்மையில் மண் எடுத்துவரச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார். ஆயினும், அதனையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் இரவுவேளைகளில் மண் எடுத்துச் செல்லப்படுகின்றது.

அத்துடன், இதன் பின்னணியில்- அப்பகுதிகளில் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் இருக்கக்கூடும் என மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (55)

# 300 வளர்ப்பு நாய்களுக்கு 2 ஆம் கட்டத் தடுப்பூசி

வளர்ப்பு நாய்களுக்கான 2 ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றுவதற்கான திகதிகள், யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை மறுதினம் காலை 8.00 மணியிலிருந்து 12.30 வரை வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையத்திலும், அன்றைய தினம் 2 மணி தொடக்கம் 4.30 மணிவரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும், 23 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் 12.30 வரை நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்திலும், மாலை 2 மணி தொடக்கம் 4.30 மணிவரை கொட்டடி சனசமூக நிலையத்திலும் நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

500 மருந்துகள் மட்டுமே யாழ்ப்பாண சுகாதார திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக 200 மருந்துகள் சுண்டிக்குளி, நல்லூர்ப் பகுதி வளர்ப்பு நாய்களுக்கு போடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவையே இரண்டாம் கட்டத்தில் போடப்படவுள்ளன.

இன்னும் சில தினங்களில் மருந்துகள் கிடைத்ததும், தடுப்பூசி போடும் பணி ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் எனச் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு)

## பல்கலைக்கழகத்தில் திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால், வாரந்தோறும் காண்பிக்கப்படும் திரைப்படக் காட்சித் தொடரில், இன்று காலை 10 மணிக்கு வி.எம்.விணுவின் நெறியாள்கையிலான 'வாசு' எனும் தமிழ்த்திரைப்படம் காண்பிக்கப்படும்.

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தை தவிர்ப்போம்
* 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
* X -RAY - ECG, சில முக்கிய இரத்தப்பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/860)

இதுவரை காலமும் தடைப்பட்டு இருந்த பாதையை (கோப்பாய் வீதியில் இருந்த காணி) ஊர்மக்களின் பாவனைக்காக இராசையா கனகரத்தினம் (உரும்பிராய் கிழக்கு) என்பவர் தனது காணியால் முன் உதாரணமாக விட்டுக் கொடுத்துள்ளமைக்காக அவரைப் பாராட்டுகிறேன்.
பாராட்டுபவர் - கா.நல்லதம்பி (316)

# இன்றைய நாள் இனிய நாள்

**20-04-2003 - ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தொழில்சமம், அதிகாரவிருத்தி, நேத்திரரோகம், சத்துரு வெற்றி, பொருள்வரவு. |
| இடபம் | :- காரியவிக்கினம், வயிற்றில்ரோகம், குடும்ப மகிழ்ச்சி, புதியஸ்தானம். |
| மிதுனம் | :- பயனற்ற பிராயசம், வாக்குக்கலகம், வீண்பழிகேட்டல், பொருட்சேதம். |
| கர்க்கடகம் | :- தர்மகாரிய சித்தி, நற்குணம், புத்திரசுகம், இனசன கொண்டாட்டம், குடும்பக்கஷ்டம். |
| சிங்கம் | :- இரத்த சம்பந்தமான ரோகம், தேகசுகக்குறைவு, காரியத் தடை, தனித்த நிலை. |
| கன்னி | :- உறவினரால் கவலை, கோபமிகுதி, தாரபுத்திரவிரோதம், வாக்குக்கலகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- பயனற்ற பிரயாசம், புத்திரரால் கவலை, ஊக்கமிகுதி, பொருள்வரவு. |
| விருச்சிகம் | :- சமாதான வாழ்வு, காரியசித்தி, நன்மதிப்பு, பணவரவு, அதிகலாபம். |
| தனு | :- குடும்ப மனஸ்தாபம், ஆரோக்கியம், தனலாபம், சிநேகிதரால் கவலை, தொழில்சிறப்பு. |
| மகரம் | :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு,களஸ்திரசுகம், பந்து விரோதம், பெரியோர் மதிப்பு, |
| கும்பம் | :- தேகமெலிவு, உக்கிரமான வெற்றி, காரியக்கேடு, நற்குண விருத்தி, சிநேகலாபம். |
| மீனம் | :- சந்தோஷமிகுதி, பிரயாணக் கஷ்டம், வாக்கு வசீகரம், பெரியோர் சிநேகம் |

# எனக்கும் ரணிலுக்கும் இடையில் உறவு உள்ளது போல் நடிக்கிறோம்

## 'இந்தியா ருடே' சஞ்சிகைக்கு ஜனாதிபதி சந்திரிகா பேட்டி



எனக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நல்ல உறவு இருப்பதாக நாம் மக்களுக்குக் காட்டிக்கொள்கிறோம். நாம் சந்திக்கும் போதெல்லாம் இனிமையாகப் பேசுகிறோம். நாமிருவரும் எமது நாட்டுக்கு நல்ல நடிகர்களாகவே இந்த வகையில் இருக்கின்றோம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

'இந்தியா ருடே' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கும் போது-

சமாதான முயற்சிகள் பற்றி ரணில் விக்கிரமசிங்க என்னுடன் கலந்துரையாடுவதில்லை. அரசியலமைப்பின்படி - அவர் எனது அனுமதி எடுத்துத்தான் ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவேண்டும்.

அவர் அப்படி நடிக்கத் தவறினால் - அவரது அரசாங்கத்தைக் கலைத்து விட என்னால் முடியும். ஆனால் நான் அப்படிச் செய்யப்போவதில்லை.



என்னுடைய பாணி அரசியல், அவரிடமிருந்து மிகவும் வேறுபட்டது.

அமைதி முயற்சிகளின் முக்கிய இலக்கு இராணுவ மயமாக்கலைக் களைவதாகும். போர் நிறுத்தத்தால் தற்போது தற்காலிக அமைதிதான் ஏற்பட்டுள்ளது. நிரந்தர அமைதி ஏற்பட வேண்டுமானால், இராணுவ மயமாக்கல்களைத் தவிர்ப்பது பற்றிப் பேசவேண்டும்.

இதற்கு ஆயுதங்களை ஏந்தியுள்ளவர்கள் அவற்றைக் கைவிடத்தயாராக வேண்டும். இராணுவ மயமாக்கல், சிவில் நிர்வாகத்தினை ஏற்படுத்துவது பற்றி இன்னமும் பேசப்படவில்லை. இந்த விடயங்கள் பற்றிப் பேச ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்கவேண்டும்.

அரசாங்கம் இப்போது சரியான இலக்கை அடைய பிழையான வழியில் செல்கிறது என்றே நினைக்கிறேன் என அவர் மேலும் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

# வைகோவைச் சிறையில் சந்திக்க கருணாநிதிக்கு அனுமதி மறுப்பு

## சிறை அதிகாரிகள் தடுத்தனர்

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டு தமிழக அரசினால் கைது செய்யப்பட்டு பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோவைச் சந்திக்க, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சென்னை மத்திய சிறைக்குச் சென்று கலைஞர் கருணாநிதி, வைகோவைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார். தி.மு.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலுவுடன் மத்திய அமைச்சர்களுக்கான சிறப்பு அனுமதியைப் பெற்று கருணாநிதியும் சிறைக்குச் சென்றிருந்தார்.

ஆனால், சிறைச்சாலை அதிகாரிகள் கருணாநிதியையோ, அமைச்சர் ரி.ஆர்.பாலுவையோ ம.தி.மு.க செயலாளர் வைகோவைச் சந்தித்துப் பேச அனுமதிக்கவில்லை. இதனால், இருவரும் திரும்பிச் சென்றனர்.

தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சியை அகற்றுவதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை எதிர்வரும் 24 ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்துள்ள கலைஞர் கருணாநிதி இதற்கு முன்னோடியாக வைகோவைச் சந்தித்துப்பேசத் திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இருநாள் விஜயமாக சந்திரிகா டாக்காவுக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று பங்களாதேஷுக்குச் சென்றுள்ளார். இரண்டு நாள் விஜயமாக டாக்காவுக்குச் சென்றுள்ள இவர், இரு நாட்டு உறவுகளை வளர்ப்பது குறித்த பேச்சுக்களில் ஈடுபடுவார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பங்களாதேஷ் பிரதமர் கலீதா ஷியாவுடன் ஜனாதிபதி சந்திரிகா நடத்தவுள்ள பேச்சுக்களின்போது - இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்கள் குறித்தும், சார்க் அமைப்பின் எதிர்காலம் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை சமாதான முயற்சிகளுக்கு கனடா அரசாங்கம் ஆதரவளிக்கும்

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் ஆரோக்கியமான முறையில் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் - இந்தச் சமாதான முயற்சிகள் வெற்றிபெறத் தேவையான அனைத்து ஆதரவையும் கனடிய அரசாங்கம் வழங்கும் என்றும் அந்நாட்டு அமைச்சர் டி.கில்கர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமஷ்டி ஆட்சிமுறை மற்றும் மனித உரிமை விவகாரங்கள் குறித்து அதிக அக்கறை செலுத்திப் பேசி வருகின்றனர்.

இந்தச் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னேற்றகரமான பாதையில் இடம்பெறும் என்ற நம்பிக்கையை இது தோற்றுவித்துள்ளது.

சமஷ்டி நிர்வாக அமைப்புமுறை பற்றியும், அதன் நன்மைகள் பற்றியும் விடுதலைப்புலிகள் மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள் ஆராய்ந்து அறிந்து கொள்வதற்குக் கனடா அரசாங்கம் அனைத்து வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் கனடிய அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (லி)







தியாக தீபம் அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றபோது அகவணக்கம் செலுத்தப்படுவதையும், விசேடமாக வடிவமைக்கப்பட்ட பந்தலில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருப்பதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்

(வடமராட்சி)

கிணற்றில் தவறி வீழ்ந்த வயோதிபர் ஒருவர் மரணமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை புலோலி தெற்கில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அண்ணாமலை தம்பிப்பிள்ளை (வயது 73).என்பவரே மரணமடைந்தவராவார்.

இவரது சடலம் மந்திகை மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணைகளின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (23)

## போரூட் உதவிகள்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தில் போரூட் நிறுவனம் பல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து வருகின்றது.

1998 ஆம் ஆண்டு முதல் கடந்த 2002 ஆம் ஆண்டு வரைக்கும் நொறாட் அமைப்பின் உதவித்திட்டத்தின் கீழ் 1500 மலசல கூடங்களையும் 34 கிணறுகளையும் இந்த நிறுவனம் அமைத்துக்கொடுத்துள்ளது.

அத்துடன் 61 பாலர் பாடசாலைகளுக்கான உதவிகளையும் செய்து கொடுத்துள்ளதாக போரூட் நிறுவனப் பிரதிநிதி எஸ்.கோகுலதாசன் தெரிவித்தார். (100)

## நன்கொடை நிதி

(மானிப்பாய்)

வேலணை பிரதேசசபைக்கு உட்பட்ட நயினாதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களிலுள்ள சனசமூக நிலையங்களுக்கான இவ்வருடத்திற்குரிய அரச நன்கொடை நிதி வேலணைப் பிரதேசசபையால் வழங்கப்பட்டுள்ளது.

சென்ற வருட நிதியைவிட இம்முறை நன்கொடை நிதி அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக நிறுவனங்களை விடுமுறை தினங்களில் மூட உத்தரவு

வழமை போன்று வர்த்தகர்கள் தமது வர்த்தக நிறுவனங்களை ஞாயிறு, மற்றும் விடுமுறை தினங்களில் பூட்டிவைக்குமாறு யாழ்ப்பாண வணிகர்கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற இரு வாரங்களும் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை ஞாயிறு மற்றும், வர்த்தக விடுமுறை தினங்களில் திறந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டது. அந்த அனுமதி நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கூட்டமும் பரிசளிப்பும்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## தனிப்பட்ட பரீட்சாத்திகளுக்கான முடிவுகள் வெளியாகின

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய குடாநாட்டு தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை முடிவுகள் தபாலகங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன.


அவை கடந்த 17 ஆம் திகதி முதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (23)

## ஒன்றுகூடல்

தேசிய இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு, எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த பிரதேச சம்மேளன பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் இளைஞர் திறன் அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சிகளும் கருத்துப்பரிமாற்றமும் இடம்பெறவிருப்பதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு)

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி



## கன்னி

உத்தரம் 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதம்

**உங்கள் விசேடத் தனித் திறன்கள்**

நிதானம், பொறுமை, ஞாபக சக்தி, புத்தி சாதுரியம், இனிமை யான சொற்கள், பெரியோர்க ளிடம் மரியாதை, அன்னையிடம் பக்தி.

**உங்கள் பலவீனம்**

எடுத்த காரியங்களில் உடனுக் குடன் செயற்படாமல் தள்ளிப் போடும் மனப்பான்மை, அளவிற்கு மீறிய நிதானம், உற்சாகக் குறைவு.

### புத்தாண்டுப் பலன்கள் 14.04.2003 முதல் 16.08.2003 வரை

**குடும்பம்**

எதிர்பாராத செலவுகளினால் பணப்பிரச்சினை ஏற்படும். வரு மானத்தில் அபிவிருத்தி ஏற்படுவது கடினம். திருமண சம்பந்தமான முயற்சிகளில் ஏமாற்றம் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு உண்டாகும். குடும்பச் சொத்துக்கள் சம்பந்தமாக விரோதமும், நீதிமன்ற வழக்குகளைச் சந்திக்கவும் கூடும். உடல்நலன் குறையும். பெண் குழந் தைகளால் குடும்பத்தில் பிரச்சினை கள் ஏற்படக்கூடும். பழைய கடன் களினால் கௌரவத்திற்குப் பங்க மும், பொருளாதாரச் சிக்கல்களும் ஏற்படும். சிலருக்குப் பூர்வீகச் சொத் துகளை விற்க வேண்டிய அவசியம் ஏற்படும். புத்திரபாக்கியம் தடை படும். சிறு காரியங்களுக்குக் கூட அதிகமாக அலைய வேண்டி வரும். தாயின் ஆரோக்கியம் பாதிக்கப் படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் தடைப்படும். குழந்தைகளின் மேற் படிப்பு சம்பந்தமாகக் குழப்பங்களும், தக்க முடிவெடுப்பதில் சிரமங்களும் ஏற்படக்கூடும். பண விஷயமாய் நீங்கள் நம்பிய ஒருவரால் ஏமாற்ற மடைவீர்கள்.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்**

உங்கள் ராசிக்கு ஜீவன ஸ்தா னத்தில் சனி பகவான் சஞ்சரிப் பதை நீங்கள் காணலாம். ஆதலால் அலுவலகத்தில் உங்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படும். பணிகளில் தவறுகள் ஏற்படக்கூடும். வேலை யும் மிகவும் கடினமாகும். சிலருக்குத் திடீரென்று இடமாற்றம் ஏற்படக் கூடும். சக ஊழியர்களினாலும் தொல்லையே. புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு கிரக நிலைகள் சாதகமாக இல்லை. வெளிநாடுகளில் வேலைக்கு முயற்சி செய்யும் கன்னி ராசி அன்பர்க ளுக்கு விசா கிடைப்பதில் தடங்கல் கள் ஏற்படும்.

சொந்தத் தொழில் நடத்துபவர் களுக்குத் தொழிலைத் தொடர்ந்து நடத்துவது சிரமமாக இருக்கும். பணப்பற்றாக்குறை ஒருபுறம். நிர்வாகப் பிரச்சினை மறுபுறம். தொழிலாளர்களின் நியாயமற்ற கோரிக்கைகள் மற்றொருபுறம் எனச் செய்வதறியாது திகைத்து நிற்பீர்கள். உற்பத்தியும் சிறிது பாதிக்கப்படக்கூடும். உங்கள் ஸ்தா பனத்தில் பணியாற்றிவரும் முக்கிய உயரதிகாரி ஒருவரால் பிரச்சினை கள் உருவாகும். அதனால் மனநிம் மதி பாதிக்கப்படும்.

குறித்த நேரத்தில் சரக்குகளை அனுப்ப இயலாது போகும். இத னால் நாணயம் கெடும். வர்த்தகர் களுக்கு பொருட்கள் விற்பனை யாகாமல் நின்று போகும். சிறிதளவு கொடுக்கல் - வாங்கலில் ஏமாற்ற மும் உண்டாகும். இது பெரும் பாலும் உங்கள் விற்பனையைப் பாதிக்கும். கூட்டாளி ஒருவரால் கடுமையான பிரச்சினைகள் உண் டாகும். திடீரென்று போட்டிகள் அதிகரிக்கும்.

**கலைஞர்கள்**

கிரகநிலைகள் தற்போது உங்க ளுக்கு உதவிகரமாக அமைய வில்லை. தொழிலில் போட்டிகள் மிகக் கடுமையாக இருக்கும். உறுதியாக நம்பி எதிர்பார்த்திருந்த நல்ல வாய்ப்புகள் கைநழுவிப் போகும். வருமானம் குறையும். ஆயினும் ஒப்புக் கொண்டதை மறுக்க முடியாது. ஆதலால் நஷ்டம் ஏற்படும்.

**அரசியலில் ஈடுபடுவோர்**

கிரகங்கள் உங்களுக்கு நன்மை செய்யும்படியாக அமையவில்லை. கட்சியில் செல்வாக்கு குறையும். சிறிது எதிர்ப்பும் உருவாகும். வருமா னம் குறையும். ஒரு சிலர் பல நிர்பந்தங்களினால் கட்சியை விட்டு வெளியேற வேண்டிய அவ சியமுண்டாகும்.

சிலர் அரசாங்கத்தினாலும், காவல் துறையினராலும் பலவித சிரமங்களுக்குள்ளாவார்கள். எதி லும் சாதுரியத்துடன் நடந்து கொள் வதும் உங்கள் சொந்தக் கருத்துகளை வெளியில் கூறாம லிருப்பதும் நல்லது.

**மாணவ மணிகள்**

மனதில் சஞ்சலமும், குழப்பமும் ஏற்பட்டு, பாடங்களில் மனதைச் செலுத்த முடியாமல் சிரமங்கள் உண்டாகும். ஆசிரியர்களுடன் மோத லைத் தவிர்ப்பது நல்லது. ஏனெ னில் வித்யாஸ்தானம் பாதிக்கப் பட்டுள்ளது. சகவாசதோஷத்தைத் தவிர்ப்பது அவசியம், பாடுபட்டுப் படித்தால் மட்டுமே ஆண்டுத் தேர் வில் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும்.

அன்னிய நாடுகளில் படித்து வரும் மாணவ, மாணவியருக்குக் கல்வி அபிவிருத்தி தடைப்படும். சலுகைகள் குறையும். ஒரு சில ருக்குக் காதல் அனுபவங்கள் ஏற் படக்கூடும். இதனைத் தவிர்க்க வேண்டும். இல்லையேல் உங்கள் எதிர்கால நலன்களைக் கடுமை யாகப் பாதிக்கும்.

**விவசாயத்துறையினர்**

விளைச்சலும் வருமானமும் ஏற் றத் தாழ்வின்றி ஒரே சீராக இருக் கும். என்றோ வாங்கிய கடன் களினால் இப்போது நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்படும். ஒரு சிலர் தங் களது ஆடு, மாடுகளை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**பெண்மணிகள்**

இராகு, சனி ஆகிய இரு வீரியம் மிக்க கிரகங்களினால் விளைச்சலும் வருமானமும் குடும்ப நிர்வாகத்தில் பலவித சிரமங்களை ஏற்படுத்தும். குடும்பச் செலவிற்கென்று வைத் திருக்கும் பணம் வேறு எதற்கோ விரயமாகும். ஆரோக்கியக் குறைவு ஏற்படுவதற்கும் சாத்தியக் கூறு உள்ளது. முடிந்தவரையில் ஓய் வெடுத்துக் கொள்வது நல்லது. மருத்துவச் செலவுகள் ஏற்படக் கூடும். சென்ற ஒன்றரை ஆண்டு களுக்குள் விவாகமான பெண்களுக் குப் புகுந்த வீட்டினருடன் வாக்கு வாதம் ஏற்படலாம் எனக் கிரக நிலைகள் எடுத்துக்காட்டுகின்றன.

வேலைக்குச் செல்லும் சகோதரி களுக்கும் சற்று சிரமமான காலகட் டம் தான் இது. மேலதிகாரிகளின் நியாயமற்ற குற்றச்சாட்டுக்களி னால் வேலையை விட்டுவிடலாமா என்ற அளவிற்கு மனம் புண்படும். சில தருணங்களில் அவசர முடிவு கள் எடுப்பதற்கும். அதனால் வருந் துவதற்கும் கிரகநிலைகளின் அடிப் படையில் இடமுண்டு.

**ஆரோக்கியம்**

கிரக நிலைகளின் அடிப்படை யில் அவ்வப்போது உங்களுக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டு உட னுக்குடன் குணமுமாகும். மனக் கவலைகளினால் உடல் நலன் பாதிக்கப்படும். கூடிய வரையில் கவலைகளைக் குறைத்துக் கொள்ள முயலுங்கள். கவலைப்படுவதனால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? துன்பம் வரும்போது என்ன செய் யலாம்? என்பதைச் சிந்தனை செய்து நடவடிக்கை எடுத்தலே விவேகமாகும். கிரகநிலைகள் அனு கூலமில்லாமல் சஞ்சரிக்கும் போது ஏற்படும் துன்பங்களை மட்டும்

**தமிழ்நாட்டின் பிரபல 'சோதிட சக்கரவர்த்தி' ஏ.எம்.இராஜகோபாலன்**

நினைக்காமலும், ஆனால் அத்துன் பங்கள் நமக்குப் புகட்டும் படிப் பினைகளை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுமாறு மிகப் புராதனமாக நீதிநூல் ஒன்றுகூறு கின்றது.

**பொருளாதாரம்**

சற்றுச் சிரமமான காலகட்டம் தான் இது. வீண் செலவுகளில் கைப்பணம் விரயமாகும். வரு மானமோ எப்போதும் போலத்தான் ஒரே அளவில் வந்து கொண்டிருக் கும். பொதுவாகவே பணமில்லா விட்டால் கடன் வாங்கத் தோன்றும். சில கிரகநிலைகள் அமையும்போது எத்தனை கஷ்டமிருந்தாலும் கடன் வாங்காமல் இருப்பதே விவேகமா கும் எனவும் அதற்குக் காரணம் அத் தகைய கிரகநிலைகள் அமையும்போது ஏற்படும் கடன்கள் எளிதில் அடை படாது எனவும் வடமொழி ஜோதி டநூல் ஒன்று விளக்கியுள்ளது.

இத்தருணத்தில் தொழிலதிபர் களுக்கு ஒரு முக்கியமான ஜோதிட உண்மையை விளக்குவதற்கு விரும் புகின்றேன். கோள்சார விதிகளின் படி உங்களுக்கு இப்போது இரு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். ஒன்று - நிதி நெருக்கடிமற்றொன்று- உடல் நலக்குறைவு. இரண்டி லுமே நீங்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியம். தசாபுத்திகள் கடுமையாக இருக் குமானால், அவர்கள் மருத்துவமனை யில் தங்கி, சிகிச்சை பெற வேண் டிய அவசியம் ஏற்படக்கூடும். அத னால், மருத்துவச் செலவுகள் அதி கமாக இருப்பதற்குச் சாத்தியக்கூறு உள்ளதை கிரக நிலைகள் உணர்த் துகின்றன. ஆதலால், மற்றச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு பணத்தைச் சேமித்து வைத்துக் கொள்வது அவசரக் காலத் தேவை களுக்கு உதவும்.

### 17.08.2003 முதல் 12.04.2004 வரை

இதுவரை பாக்ய ஸ்தானத்திலி ருந்து வீண் செலவுகளை அதிக மாகவே ஏற்படுத்தி வந்த ராகு இப் போது உங்கள் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்திற்கு வந்திருக்கிறார். கோள்சாரத்தின் பொதுவான விதி களின்படி ராகு ஒரு ராசிக்கு 8 ஆம் இடத்திற்கு வருவது நல்லதல்ல. முக்கியமாக உடல்நலனைக் கடுமை யாகப் பாதிக்கக்கூடிய கிரகநிலை இது. ஆனால், தற்போது உங்கள் மேஷ ராசியில் சஞ்சரிக்கும் ராகு விற்கு குரு பகவானின் சுபபார்வை பலம் ஏற்படுகிறது. அதனால், ராகு வினால் ஏற்படும் தோஷத்தின் கடுமை மிகவும் குறைகிறது.

இருப்பினும் ஆரோக்கியத்தில் நீங்கள் கவனமாக இருப்பது மிகவும் அவசியமாகும். உணவுப் பழக்க வழக்கங்களில் கவனமாக இருங்கள்.

(துலா ராசி நாளை)

# முருகைக் கற்பாறைகளை அகற்ற உதவுமாறு அமைச்சரிடம் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரையோரப் பகுதியில் உள்ள மீனவர் இறங்குதுறைகளில் முருகைக் கற்பாறைகளை அகற்றுவ தற்கு கனரக வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெற் றுத் தருமாறு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமா சம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமராட்சி கரையோர மீனவர் கள் இறங்குதுறைகளில் உள்ள முருகைக்கற்களை அகற்றுவதற்கு கனரக வாகனங்களைப் பயன்படுத் தப் படையினர் தடைவிதித்துள்ள னர். இந்தத் தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன், கடற்தொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கு அவச ரக் கடிதம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. கடற்தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும் இறங்கு துறைகளில் முப்பது வருடங்களாக பாறைகள் அகற்றப்படவில்லை.

இந்த நிலையில் பாறைகளை அகற்றுவதற்கு ஒவ்வொரு இறங்கு துறைகளிலும் உள்ள கடற்தொழிற் சங்கங்களினால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், அவற்றினை மனித வளத்தினைக் கொண்டு அகற்றுவது கடினமாக இருப்பதனால் கொழும்பி லுள்ள ஏ.எம்.ரி. நிறுவனத்தினூடாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளமையால் சம்பந்தப்பட்ட வர்களுடன், பேச்சுக்களை நடத்தி பாறைகளை அகற்றுவதற்கு நடவ டிக்கை எடுக்குமாறு சமாசத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (23)

# வன்னியில் 20 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை

வன்னிப் பிராந்தியத்தில் இருபதாயிரம் சிறுவர்கள் பாடசாலைகளுக் குச் செல்வதில்லை என்று ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இருந்து தெரியவந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் பெருமளவு சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியைப் பெறமுடியாது இருக்கின்றனர்.

இதற்கு போர்ச்சூழலால் ஏற்பட்ட இடம்பெயர்வுகள், வறுமை, போஷாக் கின்மை போன்ற காரணங்கள் முக்கியமானவையாகும். போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து விடுபட சிறுவர்கள் தொழில் முயற்சிகளில் ஈடு பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இந்த வகையில் 17 ஆயிரம் சிறுவர்கள் வன்னிப் பகுதியில் பாடசாலை களுக்குச் செல்லாமலேயே தமது பாடசாலைப்பருவத்தைக் கழித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பனை அபிவிருத்திச் சபையின் 25 ஆவது ஆண்டு விழா ஏற்பாடு

பனை அபிவிருத்திச் சபையின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட் டிய நிகழ்வுகளை தேசிய மட்டத் தில் நடத்துவதற்கான விரிவான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

பனை அபிவிருத்திச்சபை ஆரம் பிக்கப்பட்டு 25 வருடங்கள் இவ் வருடத்துடன் பூர்த்தியாகின்றன. இந்த ஆண்டில் பனைவளம் பற்றி மக்களி டையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாடளாவியரீதியில் நிகழ் வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு வரு கின்றன.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு - யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங் களில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, புத் தளம் ஆகிய பிரதேசங்களிலும் சிறிய ளவிலான நிகழ்வுகளும் நடாத்தப் படவிருக்கின்றது. இந்த விழாவை யொட்டி - வெள்ளிவிழா மலர் வெளி யீடு மற்றும் முத்திரை வெளியீடும் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே பனைவளம் பற்றிய ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள், கண் காட்சிகளும் நடத்தப்படவுள்ளன.

பனையோலை, மரக் கைப்பணி யார்களிடையில், அவர்களுடைய ஆற்றல்களை வெளிப்படுத்தும் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளை நடத்துவ தற்கு பேராசிரியர் வி.கே.கணேசலிங் கம் தலைமையிலான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பனைசார் உற்பத்திப் பொருட் களின் மூலம் நாட்டினுடைய பொருளா தார, சமூக மேம்பாட்டை உயர்த்த முடியும் என்ற நம்பிக்கையை இச் சபை உருவாக்கும் என்பதை -

இந்த நிகழ்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்படுமென பனை அபி விருத்திச் சபையின் அதிகாரியொ ருவர் தெரிவித்தார். (23)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : த.சுடர்
முகவரி : மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

பத்தாவது அகவையில்

பெயர் : நா.தேனுயா
முகவரி : வெல்வத்தை, நெல்லியடி, கரவெட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# இது சரியாத்தான் இருக்கு

விளையாட்டு அரங்கம்

உலகக் கிரிக்கெட் போட்டிகளின் தோல்விக்குப் பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டன. இலங்கை அணியைப் பொறுத்து பல்வேறு காரணங்களுடன், இன்னொரு காரணமும் சேர்த்துக் கூறப்படுகிறது. அதுதான் நீண்டகாலத் தொடர்ச்சியான கிரிக்கெட் விளையாட்டு. ரசிகர்கள் ஒன்றரை மாத உலகக் கிண்ணப்போட்டிகளை ஆர்வத்துடன் பார்த்து, ரசித்து திருப்தியும், களைப்பும் அடைந்த வேளையில், மேலும் தொடர்ந்த கிரிக்கெட் ஆட்டங்களை அம்போ என்று கைவிட்டார்கள். ஆனால், கிரிக்கெட் வீரர்கள் அப்படி விடமுடியாது. ஏனெனில், அது அவர்களின் தொழில். இதுவே இலங்கை அணியின் நிலையும்கூட.


திரும்பிப்பார்க்க நேரமில்லை

இலங்கை அணியினர் ஓரளவில் காலஎல்லையைப் பார்த்தால், 2002 ஏப்ரல் முதல் இன்றுவரை ஓய்வு, உறக்கமின்றி கிரிக்கெட் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு உரிய பட்டியல் ஒன்றையே போட்டுக்காட்டுகிறார் விமர்சகர் ஒருவர். 2002 ஏப்ரலில் சார்ஜா கிண்ணப்போட்டிகள், அதைத் தொடர்ந்து இங்கிலாந்துக்கான சுற்றுப்போட்டிகள் இதில் முக்கோண ODI, மூன்று டெஸ்ட் போட்டிகள், பௌன்றி ஆட்டங்கள் என்ற வகையறாக்கள். அது முடிய இந்திய - பங்களாதேஷ் முக்கோண ODI, மேலும் இரண்டு டெஸ்ட் போட்டிகள். தொடர்ந்து மொறோக்கோ கிண்ண முக்கோணப் போட்டிகள், அதன் பின் இலங்கையில் நடைபெற்ற ICC சம்பியன்ஷிப் போட்டிகள். அதனையும் முடித்துக் கொண்டு தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணம்.

அதோடு- அப்படியே அவுஸ்திரேலிய VB கிண்ண முக்கோண ODI போட்டித் தொடர். இதெல்லாம் முடித்து வீட்டில் இருந்தது ஒரு சில நாட்கள் மட்டுமே. தொடர்ந்து வந்தது 2003 உலகக்கிண்ண கிரிக்கெட் திருவிழா. திருவிழா முடிந்ததும், வைரவர் பூசை மாதிரி சார்ஜா பயணம். இதோ இப்போதுதான் இலங்கை அணியினர் தம் வீட்டை எட்டிக் பார்க்கிறார்கள். அதற்குள் ஸ்ரீபன் பிளெமிங் தன் அணியுடன் வந்திறங்கி, 2 டெஸ்ட் போட்டி விளையாட வாரும் பிள்ளாய் என்கிறார். அதோடு, இணைந்து ரசீட் லத்தீப் வந்து குதிக்கப் போகிறார் ODI முத்தரப்புப் போட்டிகளுக்கு. சரி, அதுவும் முடிநதால்? இருக்கவே இருக்கிறது கரிபியன் TOUR. 2 டெஸ்ட், 5 ODI கள் விளையாடியாக வேண்டும்.

இப்படிப்பட்டதொரு SCHEDULE வெறுப்பேற்றும். ஏத்தாதா, அதுமட்டுமல்ல இலங்கை அணி வீரர்கள் சிலர் நிரந்தரக் காயங்களுக்கு உள்ளாகியதற்கும் இது ஒரு காரணம். காயங்கள் மாறாமற்போனதுக்கும் இது ஒரு காரணம். இன்னொரு பெரும் பாதிப்பு உள்ளூர்க் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் இலங்கையின் அதிசிறந்த வீரர்கள் பங்கேற்பதேயில்லை. இதனால் கழகங்களுக்குப் பாதிப்பு. எதிர்கால வர்ர்களைத் தெரிய அளவுகோல் எதுவென்று தெரியாதநிலை. நட்சத்திரங்கள் இன்மையால் உற்சாக மற்ற ஆட்டங்கள். உள்ளூர் வீரர்களுக்கும் ஒரு ஆதர்சமின்மை.

மேலும், நட்சத்திர ஆட்டக்காரர்கள் - தம் குடும்பம், அப்பா, அம்மா, பிள்ளைகள் என்று கொண்டாடுவது அரிதாகவே போய்விட்டது. இது மிகமிக மோசமான உளவியல் தாக்கங்களுக்கு வீர்களைக் கொண்டு போகும்.

எனவே, இதற்கு உடனடியாகப் பரிகாரம் காணப்பட வேண்டும். இல்லாவிட்டால் இலங்கை அணியின் கிரிக்கெட் தரத்தை உயர்த்த முடியாமலே போகும் என்கிறார் ஒரு விமர்சகர். முதலில் சார்ஜா கிண்ணம், மொரோக்கோ கிண்ணப் போட்டிகள் போன்றவற்றை நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான ஒப்பந்தங்கள் முடிவடைந்ததும், இவை பற்றிய மீள்பரிசீலனை அவசியம். அடுத்த உள்ளூர்க் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில், நட்சத்திர ஆட்டக்காரர்கள் பங்குகொள்வது மிக அவசியம் என்பது உணர்த்தப்பட வேண்டும்.

அதோடு, குறிப்பிட்ட சில வீரர்களில் மட்டும் தங்கியிராமல், திட்டமிட்ட முறையில் இளம் ரத்தங்களையும் பயிற்றுவித்துக் கொள்ளவேண்டும். அதன் மூலம் காயப்பட்டவர்களுக்குப் பரிகாரமும், ஓய்வும் கிடைப்பதுடன், இளமட்டம் சர்வதேச தரத்தை அறிந்து, அனுபவப்படவும் முடியும். இப்படியான திட்டங்கள் இலலாவிட்டால் இலங்கை அணியின் சர்வதேச தரக் கிரிக்கெட்- வீழ்ச்சிப் பாதையிலேயே செல்லும் என்று எச்சரிக்கிறார் கிரிக்கெட் விமர்சகர் ஒருவர். எனவே, சகல தரப்பினரும் இவற்றைக் கவனத்திற்கொளளுதல் அவசியம். சரியான நேரத்தில் சிவப்பு விளக்குக் காட்டப்படுகிறது. அவசியமான சமிக்ஞை அது.


ஓய்வில்லாட்டில் எத்தனை நாளைக்கு...?

-நர்மதா

# மகிழ்ச்சிக்கு அளவேயில்லை

அறிமுகமே அவசியமில்லாத மரியன் ஜோன்ஸ், தாய்மைப் பேற்றை அடையப் போகின்றார். தனக்கும், ரிம் மொன்ட்கொமரிக்கும் இந்த ஜுலையில் ஒரு குழந்தை பிறக்கவிருப்பதாகத் தெரிவித்திருக்கும் மரியன், பாரிஸில் ஒகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் WORLD CHAMPIONSHIP போட்டிகளில் கலந்துகொள்ள முடியாதவராக இருக்கிறார். ஆனால், 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளத் தனக்கு எந்தத் தடையும் இருக்காது என்றும் கூறியுள்ளார். மரியன்- வேர்ல்ட் சம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்துகொண்டால், ஐக்கிய அமெரிக்காவிற்கு இரண்டு தங்கப் பதக்கங்கள் நிச்சயமுண்டு. ஆனால், இவர் பங்குபற்றாத நிலையில் பதக்கங்களின் எண்ணிக்கையில் ஏற்படப் போகும் வீழ்ச்சி ஒரு கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வகையில், ஐக்கிய அமெரிக்காவுக்கு தங்கம் வென்று தரக்கூடிய வரிசையில் இரண்டு பெண்மணிகளே உள்ளனர். ஒருவர்- தடை தாண்டல் வீராங்கனை கெய்ல் டெவர்ஸ், மற்றவர் கோலூன்றிப் பாய்தல் சாதனையாளர் ஸ்ரேசி டிரகலியா. ஆனால், ரஷ்ய பேவனோ வாவை இவர் வெல்லவேண்டுமே. இந்தவகையில், தம் நாட்டின் ACE ATHLETE களமிறங்காமை, ஐக்கிய அமெரிக்க தடகள ரசிகர்களுக்கு ஒரு அதிர்ச்சியை அளித்திருப்பதை அறியமுடிகின்றது. அதுவும் ஒலிம்பிக் போட்டிகள் அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்த நிலையை அவர்களால் ஜீரணித்துக்கொள்ள இயலவில்லை .

மறுபுறம், மரியன் ஜோன்ஸால் மகிழ்ச்சியைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை. கடந்த வருடம் கருத்துக் கூறும்போது, பாரிஸ் போட்டிகளில் மூன்று தங்கங்களாவது வெலவேன் என்றார் மரியன. ஆனால், தற்போது அவர் பெறப்போவது விலைமதிப்பற்றது.


எனக்கொரு மகன் பிறப்பான்

நான் கர்ப்பிணியாயிருப்பது, என் விளையாட்டு ஆர்வத்தை எவ்வகையிலும் குறைத்துவிடாது. அதேவேளை, தாய்மை அனுபவம் என்பதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் எதிர்நோக்குகின்றேன் என்கிறார் அவர். இவரைப்போன்று பிரபல்யமிக்க பெண் வீராங்கனைகளின் சாதனைகள், மரியனுக்கு நம்பிக்கை கொடுக்கும். அமெரிக்கப் பெண்மணி எவலின் ஆஷ்போட் - 1984 லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக்கில், இரண்டு தங்கப் பதக்கங்கள் வென்றவர். 1985 இல் ஒரு பெண் மகவிற்குத் தாயானார். 1988 சியோல் ஒலிம்பிக்கில், 4x100 அஞ்சலோட்டத்தில் தங்கம், 100 m ஓட்டத்தில் வெள்ளி பெற்றார். அதேபோல, வலரி பிறிஸ்கோ ஹூக்ஸ் எனும் பெண்மணியும் தாய்மைப்பேற்றின் பின், 1984 இல் 200 m, 400 m இரண்டு போட்டிகளிலும் தங்கம் வென்றவர். ஆகவே, 2004 இல் மரியன் ஜோன்ஸ் நிச்சயம் வெல்லப்போகும் பதக்கங்கள் எத்தனை? மூன்றில் இருந்து ஐந்துவரை எத்தனையாகவும் இருக்கலாம்.

- ராஜ்குமார்

நடந்து முடிந்துபோன செர்ரி புளொசம் சார்ஜா கிண்ணப் போட்டிகள் ரசிகர்களின் கவனத்தைப் பெரிதாகக் கவர்ந்ததாகத் தெரியவில்லை (ஒன்றரை மாதத்திருவிழாவின் களைப்போ). அதேபோல, பங்களாதேஷ் முக்கோண ஒருநாள் போட்டிகளும் அவ்வளவு விறுவிறுப்பை ரசிகர் மத்தியில் ஏற்படுத்திவிடவில்லை. ஆனால், வெகுதூரத்தில் கரிபியனில் நடைபெறும் மேற்கிந்திய- அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரின் பக்கம் திடீரென கிரிக்கெட் ரசிகர்கள் அவசரமான அவதானத்தைத் திருப்பியிருக்கிறார்கள்.


சரிக்க ஆரம்பிச்சிட்டேன்

இரண்டு அணியிலும் புதிய தலைவர்கள், இரண்டு அணியிலும் ஒரு சில மாற்றங்கள். மேலும், இரண்டு முகாமும் சவாலுக்குச் சளைக்காத அணிகள். அந்தவகையில், முதலாவது டெஸ்ட் போட்டி வித்தியாசமான ஏற்ற இறக்கங்களைக் கொண்டே இருந்தது. தென்னமெரிக்கக் கண்டத்தின் பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள கயானா நாட்டின் ஜோர்ஜ் ரவுண் தலைநகரின் போர்டோ மைதானத்தில், முதலில் களம் இறங்கிய மேற்கிந்திய அணி, மளமள

# இனி எல்லாமே

வென்று சரிந்து 5/53 என்ற நிலையில் சந்தர்போலின் 100 ஓட்டங்களுடன், ஒருவாறு 237 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்த அவுஸ்திரேலியா, தம்தரத்தில் எவ்விதகுறைவும் காட்டாது, ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் லாங்கர் 146, ரிக்கி பொன்ரிங் 117, கில்கிரிஸ்ட் 77 என்று சேர்த்த ரன்களுடன், 489 ரன்களை மொத்தமாகக் குவித்துக்கொண்டனர். வெஸ்பட் டிரேக்ஸ் 5 விக்கெட்டுகளைப் பெற்றார்.


கையைத் தூக்கினால் காணுமா? வெற்றிக் கிண்ணம்...?

அடுத்து, தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் மிக நன்றாகவே ஆரம்பித்தார்கள். டரன் கங்கா

# எங்களுக்குத்தான்

113, பிறைன் லாரா 110 என்றவாறு ரன் குவிக்க, ஐந்து விக்கெட் இழப்பிற்கு 354 என்ற எண்ணிக்கையில் ஜிலெஸ்பி - அழிவை ஆரம்பித்து வைத்தார். விளைவு இறுதி ஐந்து விக்கெட்டுகள் - பதினேழு ஓட்டங்களுக்குச் சரிந்தன. மேற்கிந்திய அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கை 398 ஆக இருந்தது. ஜிலெஸ்பி 5/38 என்ற பந்துவீச்சுப் பெறுபேற்றைப் பெற்றார். எனவே, நான்காவது நாளில் அவுஸ்திரேலியா வெல்வதற்கு எடுக்கவேண்டிய எண்ணிக்கை 147 ஆக இருந்தது. அதனை ஒரு விக்கெட் இழப்புடன் பெற்றுக்கொண்டார்கள். லாங்கர், ஆட்டமிழக்காமல் 78. அவுஸ்திரேலியா 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்த மைதானத்தில் - அவுஸ்திரேலியா- 78 ஆம் ஆண்டு வெற்றி பெற்றபின், தற்போது மறுவெற்றியைப் பெற்றிருக்கிறது. அலன்போடரின் சாதனையை முறியடித்து, ஸ்ரீவ் வோ தனது 157 ஆவது டெஸ்ட் போட்டியை ஆடியிருக்கிறார். மேற்கிந்திய- அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர்களில், மேற்கிந்தியாவில் நடைபெற்ற போட்டிகளில் - இரண்டு அணிகளும் தலா 13 வெற்றிகள் பெற்றன. வெற்றி தோல்வியின்றி முடிந்தவை 13.

இரண்டாவது டெஸ்ட், ரினிடாட் போர்ட் ஒவ் - ஸ்பெயினில் நடைபெறவுள்ளது. அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை, பெரிதாக அலட்டிக்கொள்ள எதுவும் இல்லை. இருந்தும், எதிர்பார்க்கைக்கு மாறாக மேற்கிந்திய அணி சிறப்பாகச் செய்துள்ளது. லாரா கருத்துக் கூறும்போது - அவுஸ்திரேலியர்களை நாங்கள் நிறையவே அவதானித்துள்ளோம். இரண்டாவது டெஸ்டில் இன்னும் சிறப்பாகச் செய்வோம் என்றார்.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# வளரும் தலைமுறை

**2003**
**19 வயதிற்குட்பட்ட பிரிவு**
**போட்டிகள் - 8**
**ஓட்டங்கள் - 738**
**எதிர்: யாழ்.மத்திய கல்லூரி 127-63 பந்துகள் (ஒரு ஓவரில் 6 SIX)**
**யூனியன் கல்லூரி - 122**
**யாழ். இந்துக் கல்லூரி - 110**
**யாழ். பரியோவான் கல்லூரி - 89**
**மானிப்பாய் இந்துக் கல்லூரி - 65**



மதுஷன்

ஆற்றல் நிறைந்த இளந்த லைமுறையினரில் ஒருவரைச் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. கொக்குவில் இந்துவின் மைந்தனான சந்திர நாதன் மதுஷன் தற்போது க. பொ.த உ/த வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கிறார். இயல்பான கிரிக்கெட் ஆற்றல் நிறைந்த இவர், தன் ஆரம்பக்கல்வியைக் கொக்குவில் இந்து ஆரம்பப் பாட சாலையில் கற்றவர். சிறுவயது முதலே தந்தையின் கிரிக்கெட் ஆர்வம் தன்மீது ஆழமாகப் பதிந்துவிட்டது என்பதைக் கூறும் அவர், தனது கிரிக்கெட்டைப் பொறுத்தளவில் தந்தையே தனது முதல் ஆசான் என்று கூறுகிறார்.

மதுஷனின் தந்தையார் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். எழுபதுகளில் கல்லூரி கிரிக்கெட் அணியின் வீரா. சிறந்த துடுப்பாட்ட வீரனான அவர், தன் கணக்கில் சில சதங்களும் சேர்த்துவைத்திருக்கிறார். மதுஷனின் தாயார் - மகன் கற்கும் கல்லூரியிலேயே ஆசிரியை. மதுஷனின் இரண்டு தம்பியரும் 14 வயதிற்குட்பட்ட, இதே கல்லூரி அணியில் வீரர்கள். மொத்தத்தில் நல்லதொரு கிரிக்கெட் குடும்பம். மகனின் கிரிக்கெட் துறைபற்றிக் கருத்துக் கூறும்போது - கல்வித்துறையின் உயர்ச்சிதான் கிரிக்கெட்துறையின் உயர்ச்சியைக் கணிக்கச் செய்யும் என்கிறார் தந்தை.



'அப்பா மிஸ்பண்ணின செஞ்சரிகளை கவர் பண்ணுவேன்'.

உண்மையான வார்த்தைகள். தற்போதைய 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியில் ஒரு வீரராகவுள்ள இவர், பாடசாலை மட்டக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில், தனது பதினான்கு வயதிலேயே 15 வயதிற்குட்பட்ட பிரிவில் ஆடிய அதே வேளை, தனது 15 ஆவது வயதில் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியின் ஒரு துடுப்பாட்ட வீரராகத் தன்னை நிரூபித்தவர். அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்கும் திறமை வாய்ந்த இவர் - தன் வளர்ச்சிப் பாதையில் 17 வயதிற்குட்பட்ட காலப்பகுதியில், பயிற்றுநர் ஜனார்த்தனன் மற்றும் பத்தொன்பது வயதுப் பிரிவில், பயிற்றுநர் கோகுலன் ஆகியோரால்- தான் புடம் போடப்பட்டதாக நன்றியுடன் கூறுகிறார். இவரது ஆற்றல், யாழ். மாவட்ட 15 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியின் - (2000) உபதலைவர் பதவியை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது. மேலும் 2001, 2002 இல் 17 வயதிற்குட்பட்ட பிரிவில், மாகாண மட்டப் போட்டிகளுக்கான அணியில் அங்கத்தவராக இருந்த வா. தம்புள்ளையில் நடைபெற்ற இப் போட்டிகளில்- மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை மாவட்ட அணிகளுடன், யாழ். மாவட்ட அணியும் போட்டியிட்டது.

தனது கிரிக்கெட் வாழ்வில்- இந்த இரண்டு களப் பயணங்களும் நிறைந்த அனுபவத்தைத் தந்தன என்று கூறுபவர், இவ்வணியின் பயிற்றுநர் சண்முகலிங்கத்தின் பாரிய பங்களிப்பை மிக நன்றியுடன் எடுத்துக் கூறுகின்றார்.

19 வயதிற்குட்பட்ட தேசிய அணித் தெரிவிற்காக அழைக்கப்பட்ட பலருள் மதுஷனும் ஒருவர். இருந்தும் NATIONAL POOL மட்டத்துக்குள் தன்னால் நுழைய இயலவில்லை என்பவர், தனது நணபணான யாழ். மத்திய கல்லூரி மாணவன் கே. றொகான் அந்த மட்டத்துக்குள் இடம்பிடித்துச் சில ஆட்டங்களில் பங்கு கொண்டுள்ளார் என்பதை மிகப்பெருமித உணர்வுடன் கூறி, இதனைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஒரு மிதவேகப் பந்துவீச்சாளராக இருக்கும் இவரின் முதன்மைத் தெரிவு - துடுப்பாட்டமாக இருப்ப



பெற்ற பரிசுகள் சில

தைப் புரிந்துகொள்ள முடிகின்றது. 15 வயதுப் பிரிவில் தான் பெற்ற 93 ஓட்டங்கள், 2001 இல 17 வயதுப் பிரிவில் பெற்ற யாழ். மத்திய கல்லூரிக்கெதிரான 109 ஓட்டங்கள், கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு எதிரான 111 ஓட்டங்கள் மற்றும் 1999 இல் 19 வயதிற்குட்பட்ட பிரிவில், தனது 16 வயதில் தான் பெற்ற, யாழ். இந்துக் கல்லூரிக்கெதிரான 101 ஓட்டங்கள் என்று நிறையவே குறிப்பிடும் மதுஷன், இவற்றை நாங்களாகக் கேட்காவிட்டால் குறிப்பிட்டிராத கூச்ச சுபாவம் நிறைந்த, அமைதியாகப் பேசும் தன்மை கொண்டவர்.

தான் கல்விபயிலும் கல்லூரி - தன் வளர்ச்சிக்கான அச்சாணியாக இருப்பதை மிகக் கனதியானதாகச் சுட்டிக்காட்டும் அவர், எல்லாம் கல்லூரி மாதாவுக்கே சொந்தம் என்கிறார். இவரது நன்றிக்குரியவர்களில்- ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள், நலன்விரும்பிகள் பட்டியல் மிக நீளமானது. நன்றி மறவாத இந்த இளைஞர் ஒவ்வொருவராகப் பட்டியலிட்டுக்கொண்டு வருகிறார். அதன் மூலம் இவர், கல்லூரி மற்றும் கல்லூரிச் சமூகம் சார்ந்த அனைவரினதும் அன்பை நிரம்பப் பெற்றவர் என்பதை நன்கு அறிந்துகொள்ள முடிகின்றது. KCCC கழகத்தின் அங்கத்தவராக இருக்கும் இவர், தன் பங்களிப்பைக் கழகத்துக்குக் கொடுப்பதிலுள்ள மகிழ்ச்சியுடன், நிறைய அனுபவங்களை KCCC யின் மூலம்தான் பெற்றுக்கொள்வது, நல்லதொரு வாய்ப்பென்றும் கூறுகின்றார்.

வலதுகைத் துடுப்பாட்ட வீரரான இவர் - ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கெதிராக மொத்தம் பதினொரு விக்கெட்டுகள் சாய்த்ததையும், (முதல் இன்னிங்ஸ் 7, 2 ஆவது இன்னிங்ஸ் 4) குறிப்பிடுகிறார். இவரது பிடித்தமான களத்தடுப்பு GULLY நிலையும், விக்கெட் காப்பாளர் நிலையுமாகும். தனக்குப் பிடித்த வீரர் சச்சின் என்பவர், பிடித்த அணி அவுஸ்திரேலியா என்கிறார். ஆனால், எல்லா அணிகளின் திறமையையும் அவதானித்துக் கற்றுக் கொள்ள முயற்சிக்கிறேன் என்பவர், இவ்வருடம் ஒரு ஆட்டத்தில் 6 பந்துகளில் 6 சிக்சர்கள் விளாசிய பெருமை பெற்றவர் ஆகின்றார்.

கல்வியும், கிரிக்கெட்டும் ஒன்றாகவே சேர்ந்து வளரவேண்டும் என்பவர், அதற்காக இரு துறைகளிலுமே கடினமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதைக் குறிப்பிடுகிறார்.

போட்டி, பொறாமை அறியாத இச் சிறுவயது வீரனுடன் நடாத்திய கலந்துரையாடல், மனதிற்குத் திருப்தியாக இருந்தது.

இவரது எதிர்காலக் கனவுகள் நிறைவேற இவரது அதீத திறமையும், இவரது தந்தையின் அக்கறையும் மிகப்பலமாகவே இருக்கப்போகின்றன.

எங்கள் பிள்ளைகளில் எவ்வளவோ திறமைசாலிகள், ஆற்றல் நிறைந்தோர் இருக்கிறார்கள். இவர்களின் ஆற்றல் தூண்டிவிடப்படவேண்டும். அதோடு, எல்லா மட்டங்களிலும் சரியான கணிப்பைப் பெறவேண்டும். அப்படியாக நடைபெறுமாயின், இவர்கள் எல்லோரும் சர்வதேச ரீதியில் இடம்பெறுவது என்பது சர்வசாதாரணமாக இருக்கும். இருந்தும்கூட, தம் திறமைமீது நம்பிக்கை வைத்து வளரத்துடிக்கும் மதுஷன் போன்றவர்களைச் சந்திக்கும்போது, ஒரு பெருமித உணர்வு ஏற்படுவதைத் தவிர்கக இயலவில்லை.

**- நிர்மலன்.**

# தேவை புதிய வார்ப்புகள்

இலங்கையில் கடந்த ஆண்டு நடைபெற்ற CHAMPIONS TROPHY கிரிக்கெட் போட்டிகளின்போது, ICC இற்கும் இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையே விளம்பரங்கள் தொடர்பில் ஒரு பாரிய கருத்து வேறுபாடு உருவாயிற்று. அது ஒருமாதிரி அரைவேக்காடாகத் தீர்க்கப்பட, உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளிலும் அதே



மல்கம் கிரே - என்ன கேலிச் சிரிப்பா?

சர்ச்சை பாரியளவில் தொடர்ந்தது. இந்த விடயங்களில் ICC கூடுதலாக இந்திய வீரர்களுடனும், இந்திய கிரிக்கெட் சபையுடனும் மிரட்டல் பாணியில் முறுகிக்கொண்டது. இது ஓரளவில் ICC யின் ஆதிக்கப் போக்கு என்பதும் தெரிந்தது. அவர்கள் சொல்வதே வேதவாக்கு என்றும், அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னுமாற் போன்றதொரு பாங்கு தெளிவாகவே தெரிந்தது.

இந்த வகையில், இந்திய கிரிக்கெட் சபையின் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவர் ஜக்மோகன் டால்மியா அதிருப்தியடைந்தது மட்டுமல்ல, தனது பொறுமையையும் கூட இழந்துவிட்டிருந்தார். அதெல்லாம் ஒருபுறம் இருக்க, குட்டக் குட்டக் குனிந்துகொண்டிருக்கும் பிறவி ஜக்மோகன் டால்மியா இல்லை என்பதை, இப்போது அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கும் முறையில் தெரிகிறது.

மறுகன்னத்தைக் காட்டும் போக்கு இனியும் வெள்ளைக்காரர்களுடன் சரிவராது என்பதால், வேறுவகையில் பதிலளிக்கத் தயாராகிவிட்டார் ஜக்மோகன் டால்மியா. இந்த வருடத்தின் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் ஆபிரிக்க ஆசிய கிரிக்கெட் நாடுகளை இணைத்து AFRO - ASIA CUP இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றினை நடாத்த இவர் முயல்கிறார். இது தொடர்பில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மற்றும் பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே ஆகிய நாடுகளின் கிரிக்கெட் உயர் அதிகாரிகளுடனும் தொடர்புகள் மேற்கொண்டுள்ளார் என்றவாறாகச் செய்திகள் கசிகின்றன. இது சரிவருமாயின், ஒன்றில் இந்த நாடுகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகள் அல்லது ஆபிரிக்க XI ஆசிய XI இற்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதாக இருக்கும்.

ஜக்மோகன் டால்மியா ICC யுடன் அண்மைக் காலத்தில் முரண்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், இந்த ஏற்பாட்டை மேற்கொள்ள முயல்கிறார். இதுபற்றிய முன்னெடுப்புகள் கோலாலம்பூரில் நடைபெறும் ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்தினர் இன்னும் முனைப்பாக முனனெடுக்கப்படுவதுடன், ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட வுள்ளனர்.

ACC யைப் பொறுத்தவரை டால்மியா, தான் நினைத்ததைச் செய்யக்கூடிய ஆற்றலும், செல்வாக்கும் உள்ளவர் என்பது வெளிப்படை. இந்த நிலையிலேயே பாகிஸ்தானைக்கூடத் தான் வென்றிருக்கலாம் என்ற நம்பிக்கையை அவர் கொண்டிருக்கிறார். ஏனெனில், ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை இலங்கையில் நடத்தினால், பாகிஸ்தானுடன் இந்தியா விளையாடும் சந்தர்ப்பம் உண்டு என்பதை எடுத்துக்கூறி, அதனைச் சாதித்தும் உள்ளார் அவர். அல்லது பாகிஸ் தானிலேயே இது நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த வகையில் இந்த வளைந்து கொடுதத தன்மைக்குப் பாகிஸ்தானையும் கட்டாயம் பாராட்டியே ஆகவேண்டும்.

இப்போது ஆசிய- ஆபிரிக்க நாடுகளை இணைக்க இந்தியாவின் ஜக்மோகன் டால்மியா முனைவது புதியதொரு பரிமாணத்தைக் காட்டி நிற்கின்றது. எமது தனித்துவத்தையும், கௌரவத்தையும் காத்துக் கொளள சில 'மறுததான்கள்' கொடுககவேண்டித்தான் உள்ளது என்பதை, ஆசிய, ஆபிரிக்க ரசிகர்கள் நிறையவே உணர்ந்துதான் இருக்கிறார்கள். ஆனால், யார் பூனைக்கு மணி கட்டுவது என்றொரு நிலை இருந்ததும் உண்மை. இன்னொருவகையில், ICC யின் மல் கம் கிரே, மல்கம் ஸ்பீட் ஆகியோர் தம் கையில் கடிவாளத்தை வைத்துக் கொண்டு கிரிக்கெட் நடாத்த முற்பட்டது, எல்லோர் மனதிலும் ஒரு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. இப்போது டால்மியா புறப்பட்டுள்ளார். ஆசிய, ஆபிரிக்க நாடுகள் தமக்குள் ஒன்றுபட்டு பலமானதொரு அமைப்பாக உருவாக இது கால்கோள விழா. மொத்தம் பத்து டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளில், AFRO - ASIA இல் 6 நாடுகள் உள்ளன. கென்யா உட்பட இன்னும் பல நாடுகள் ஆபிரிக்க மற்றும் பசுபிக் பிராந்தியம் தென்கிழக்காசியப் பகுதியில் உள்ளன.

ஆகவே இந்த முயற்சி ICC இற்குச் சரியானதொரு சவால். இந்தச் சவால் ICC யைப் பல வகைகளில் யோசிக்கவைக்கும்.



ஜக் மோகன் - நாங்கள் என்றும் எடுபிடிகளல்ல.

எனவே, புதிய அமைப்பை விரைவில் பலமானதொரு அமைப்பாகக் கட்டியெழுப்பச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் முழுமுயற்சி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், நம்மவர்கள் எப்பொழுதுமே 'சலாம்' போடும் ஆசாமிகள் என்றதொரு கீழ்த்தரப் பார்வையை எம்மீது செலுத்தி, தங்கள் மிதப்பை என்றென்றும் உறுதிசெய்து கொள்வார்கள். ஜக்மோகன் டால்மியாவின் பாய்ச்சல் மிகச் சரியானது. அவருக்கு ஆசிய- ஆபிரிக்க கிரிக்கெட் ரசிகர்களின் பாராட்டுக்கள்.

**- ஜோசப் கிருஸ்ணா -**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்

*- திருக்குறள்*

# நமது நோக்கு

## உண்மை உணரும்வரை...!

திருமலையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள அமைதியின்மையின் தொடர்ச்சியாக - நேற்று முன்தினம் நடந்த மற்றுமொரு அனர்த்தத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன், 17 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

மூதூரில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் கலவரங்களைத் தடுப்பதான முயற்சிகளின் ஒரு கட்டமாக - கட்டைபறிச்சான் படைமுகாமில் முக்கிய அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்ற வேளையிலேயே, அங்கு படைமுகாமுக்கு வெளியே கூடியிருந்த தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு தமிழ் இளைஞர்கள் ஸ்தலத்திலேயே பலியாகியிருக்கின்றனர்.

உட்கட்சிப் பூசலை, போட்டி அரசியலை - இன மோதலாக்கி அரசியல் இலாபம் தேடிவரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரின் நடவடிக்கைகளுடன், படையினரிலுள்ள தமிழருக்கு விரோதமான, அமைதியை விரும்பாத தீய சக்திகளும் கைகோர்த்துக் கொண்டதில் - கட்டைபறிச்சானில் மீண்டுமொரு இரத்தக்களறி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடியிருந்த வேளையில் - அவர்களுக்கு மிகச் சமீபமாகவே - தமிழ்மக்கள் மீது இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பது, அரசாங்கம் - காடையர் கும்பல்களையும், படையினரையும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்காளாகியிருப்பதைக் காட்டுவதாக தமிழ்மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மூதூரில் தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்டுவரும் தொடர்ச்சியான தாக்குதல்களினதும், அடாவடித்தனங்களினதும் பின்னணியில் தொழிற்படுகின்ற சக்திகள், மற்றும் அரசியல்வாதிகள் பற்றிய சந்தேகங்கள் வலுத்து வருகின்றநிலையில் -

தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே விரோதத்தையும் பகையுணர்வையும் தூண்டிவிடவும், இந்த இனவிரோதத் தீயில் குளிர்காயச் செய்யப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக - இரு இன மக்களும் விழிப்படைய வேண்டியது அவசியமாகின்றது.

தமிழ்மக்களுக்கெதிரான உணர்வுடன் செயற்பட்டு வரும், முஸ்லிம் சமூகத்திலுள்ள காடையர் குழுக்கள் பற்றியும், முஸ்லிம் மக்களுக்குத் தலைமை தாங்கவென கச்சைகட்டிக்கொண்டு போட்டி அரசியல் நடத்திவரும் அரசியல் தலைவர்கள் தொடர்பாகவும், இன விரோதத்தைத் தூண்டமுனையும் படைத்தரப்பிலுள்ள தீய சக்திகள் பற்றியும் - முஸ்லிம் மக்கள் அறிந்து, சிந்தித்து நிதானமாக நடந்துகொள்ளவேண்டிய கட்டத்திலிருக்கின்றனர்.

நிதானமற்ற போக்கிற்கும், உணர்வுரீதியான அரசியலுக்கும் எடுபட்டுப்போய் - நிரந்தர அமைதியையும், சகவாழ்வையும் தொலைத்துவிட முஸ்லிம் மக்கள் முயற்சிக்கக் கூடாது என்றே தமிழர் தரப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்களுடனான ஒருங்கிணைந்த வாழ்வும், அரசியல் இலக்கும் மட்டுமே, முஸ்லிம் மக்களுக்கும் கௌரவமான தீர்வையும், விடிவையும் பெற்றுக்கொடுக்குமன்றி -

நேரத்துக்குநேரம், ஆளுக்குஆள் ஆதரவுப் போக்கை, நடத்தைக் கோலங்களை மாற்றிக்கொள்ளும் சுயநலப் போக்குள்ள - 'முஸ்லிம்களின் தலைவர்கள்' எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் போலிகள் பற்றிய ஆபத்தை உணர்ந்தவர்களாக முஸ்லிம் மக்கள் செயற்படவேண்டும்.

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவிலும், நீடித்திருக்க வேண்டிய புரிந்துணர்விலும் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் - முஸ்லிம் மக்களது சமூக வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் எவ்விதத்திலும் பயன் தராது என்பதையும் - மாறாக - தமிழ் முஸ்லிம் இனங்களிடையே ஏற்படும் பிணக்குகள், முரண்பாடுகள் - தீய சக்திகளுக்கு வாய்ப்பாகிவிடும் என்பதையும் கடந்தகாலச் சம்பவங்கள் மூலமாக முஸ்லிம் மக்கள் தெரிந்து செயற்படவேண்டும்.

தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான பிணக்குகளின் மூலம், கிழக்கில் ஏற்படுத்தப்படுகின்ற அமைதியீனமும், குழப்பமும் - இரு இனங்களையும், இரு இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் பகுதிகளையும் அநியாயத்துக்குச் சுடுகாடாக்கிவருகிறதே தவிர - எவ்வித விமோசனத்தையும் முஸ்லிம்களுக்குப் பெற்றுத்தந்துவிடவில்லை.

முஸ்லிம் சமுகத்திடையே களைகளாக வளர்ந்திருக்கும் அடிப்படைவாத, தமிழர் விரோத சக்திகளதும் - தமது அரசியல் ஆதாயத்திற்காக, முஸ்லிம் மக்களிடையே இன விரோத உணர்வைத் தூண்டிவிட முயலும் தலைவர்களதும் - தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையேயான விரோதத்திற்கு எண்ணெய் ஊற்றி அந்தத் தீயில் குளிர்காய முயலும் தீய சக்திகளதும் - உண்மைத் தோற்றங்களை, இலக்குகளைப் புரிந்துகொண்டு தெளிவடையாதவரை - இப்பதற்றங்களும், அழிவும் தொடர்கதையாகும் என்பதையும்,

அது எந்தவகையிலும் அவர்களது நிம்மதியான வாழ்வுக்குத் துணையாகாது என்பதையும் முஸ்லிம் மக்கள் உணர்ந்துகொள்வார்களா? செயற்படுவார்களா? என்பதில்தான் கிழக்கின் அமைதி தங்கியிருக்கின்றது.

# பருத்தித்துறை தபால் நிலையத்தில் படையினரின் எரிபொருள் நிலையம்

## அதனாலேயே மதிப்பீட்டுக்குத் தடை!

(வடமராட்சி)

பருத்தித்துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தபால் நிலையக் கட்டடத்தில், இராணுவத்தினருடைய எரிபொருள் விநியோகப் பகுதி இயங்குவதால், தபால் நிலைய கட்டடப் புனரமைப்புக்கான மதிப்பீட்டுக்குழு அங்கு அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் - பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள 524 ஆவது பிரிகேட்டின் கட்டளைப் பீடம் அமைந்துள்ள பகுதியினுள் உள்ள தபால் நிலையத்தினை புனரமைப்பதற்கான மதிப்பீட்டுப்பணிகளை மேற்கொள்வதற்கு, அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் வந்திருந்தனர்.

மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக முகாமினுள் செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை. இதனை அடுத்து அந்தக் குழுவினர் மதிப்பீட்டுப் பணிகளை இடைநிறுத்திக் கொண்டு திரும்பினர். மதிப்பீட்டுப் பணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதை ஆராயமுற்பட்டவேளையே, 524 ஆவது படைப் பிரிவுக்கான எரிபொருள் விநியோகப் பகுதி இந்தக் கட்டடப் பகுதியில் இருப்பது தெரியவந்தது. (23)

# ஈராக் மீள் கட்டுமானத்துக்கு இலங்கைத் தொழிலாளர்கள்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க முயற்சி

(கொழும்பு)

யுத்தத்தால் நாசமாகியுள்ள ஈராக்கைப் புனரமைப்பதற்கான பணிகளில், இலங்கைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளில் - தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க ஈடுபட்டுள்ளார்.

ஈராக்கின் மீள்கட்டுமானப் பணிகளில், இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுப்பதற்காக- சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகளையும்- அமைச்சர் மகிந்த சமரசிங்க சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸையும் இது தொடர்பாக - அமைச்சர் மகிந்த சமரசிங்க சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஈராக் மீள் கட்டுமானப் பணிகளுக்கென - கட்டட வேலையாட்கள், தச்சுத் தொழிலாளர்கள் உட்பட பல்வேறு தொழில் துறையினருக்கும் அதிக வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

# றுகுணு பல்கலைக்கழக கட்டமைப்பு மாற்றம்!

றுகுணு பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றுச் செல்வோர், வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்றவகையில், அப்பல்கலைக்கழகக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படவுள்ளது.


இதன்படி - பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் நிர்வாகமும், தகவல் தொழில்நுட்பமும் கட்டாயபாடங்களாக அறிமுகப்படுத்தப்படவுள்ளன. மாணவர்கள் இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு இருபாடங்களும் கட்டாயமாகக் கற்பிக்கப்படவுள்ளன.

நவீன சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் - பல்கலைக்கழக கல்விமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்றும், றுகுணு பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்களை - நவீன உலகத்தைத் தரிசிக்க சந்தர்ப்பத்தை உருவாக்குதலும், நெருக்கடி தவிர்ப்பு நிர்வாகத்தை **(Stress Management)** மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதுமே இதன் நோக்கம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நெடுமாறனின் பிணை மனு; தீர்ப்பு தொடர்ந்து இழுத்தடிப்பு!

(சென்னை)



தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன், மருத்துவர் தாயன்பன், பாவாணன் உட்பட எட்டு தமிழ் உணர்வாளர்களின் பிணை மனு மீதான தீர்ப்பினை வெளியிட, சென்னை 'பொடா' நீதிமன்றம் தொடர்ந்தும் இழுத்தடித்து வருகிறது.

பழ. நெடுமாறன் மற்றும் எட்டு தமிழ் உணர்வாளர்கள் மீது, 'பொடா' சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள், தம்மைப் பிணையில் செல்ல அனுமதி வழங்க வேண்டும் என்று, சென்னை 'பொடா' நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

பிணை மனுமீதான விசாரணைகள் முடிவடைந்து பல வாரங்களாகியும், தீர்ப்பு வழங்கப்படுவது தொடர்ந்தும் பிற்போடப்பட்டு வருகின்றது. கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அன்றும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

நாளை திங்கட்கிழமையே - நெடுமாறன் உள்ளிட்ட எட்டுப் பேர் மீதான பிணை மனுக்குறித்த தீர்ப்பு வழங்கப்படும் என்று, சென்னை 'பொடா' நீதிமன்ற நீதிபதி இராஜேந்திரன் அறிவித்தார்.

# இலங்கை அமைதி முயற்சியில் ரஷ்ய அரசாங்கமும் ஆர்வம்!

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகள் குறித்து, ரஷ்யா ஆர்வமாக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்காக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது பற்றியும், தமது ஆர்வத்தை ரஷ்ய ஜனாதிபதி வெளிப்படுத்தினார்.

மொஸ்கோ, கிரெம்ளின் மாளிகையில் - கடந்த புதன்கிழமையன்று வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கை, கௌதமாலா, கியூபா, எரித்திரியா, மடகஸ்கர், வெனிசுவெலா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

**பருத்தித்துறை இறங்குதுறையில்**

# சீமெந்து இறக்குவோருக்கு உடலில் ஏற்படும் புண்கள்

பருத்தித்துறை இறங்குதுறையில், சீமெந்துப் பொதிகளை இறக்கும் தொழிலாளர்கள், ஒருவகை தொற்றுநோய்க்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறை இறங்குதுறையில் சீமெந்துப் பொதிகளை இறக்கும் தொழிலாளர்களில் அனேகமானவர்களின் உடலில் சீமெந்து படிவதால், ஒருவகையான புண்கள் ஏற்படுகின்றன.

சீமெந்து இறக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உடல் பாதுகாப்புக் கவசங்கள் எதுவும் இல்லாமலேயே, பருத்தித்துறையில் சீமெந்துப்பைகள் இறக்கப்பட்டுவருகின்றன. இதனால், சீமெந்து உடலில் படிந்து இந்தப் புண்கள் உருவாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (23)

# பத்தாயிரத்துக்கு அதிகமான மக்கள் இவ் வருடத்தில் மீளக்குடியமர்வு!

## இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரினால், தமது சொந்த வீடுகளை விட்டு வெளியேறி - வேறு இடங்களில் வாழ்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமானோர், இவ்வருடத்தில் மட்டும் மீளக்குடியேறியிருப்பதாக, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் இலங்கைக்கான பிரதிநிதி நீல் றொய்ட் தெரிவித்தார்.

பத்தாயிரத்துக்கும், பன்னிரண்டாயிரத்துக்கும் இடைப்பட்டோர் இந்த வருடத்தில் மட்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர், இரண்டு லட்சத்து 21 ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள், மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் நீல் றொய்ட மேலும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக, கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே, நீல் றொய்ட் இவ்வாறு குறிப்பிட்டார்.

# அல்லப்பிட்டிப் பகுதியில் சத்துணவுத் திட்டம்

அல்லைப்பிட்டிப் பகுதியில் போஷாக்கு குறைந்த குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதற்கான திட்டத்தினை நடைமுறைப்படுத்த, வேலணை பிரதேசசபையின் செயலாளர் செ.சண்முகராசா நடவடிக்கை எடுத்துவருகிறார்.

இத்திட்டத்திற்கான நிதியை ஒதுக்குவதற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டு வருவதாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (100)

# தெற்காசிய நாடுகளைக் குறிவைத்து சந்திரிகா மேற்கொள்ளும் பயணங்கள்!

சமாதான முன்னெடுப்புக்கள், இன வன்முறைகள், அபிவிருத்தி எனப் பல்வேறு விடயங்களின் மத்தியில் இலங்கையின் அரசியல் நகர்வுகள் தொடர்கின்றன.

அதில் - தென்னிலங்கையின் நிலைமை சற்றுச் சிக்கலான சூழ்நிலையை அடைந்துள்ளது. சமாதான முன்னெடுப்புக்களின் மத்தியில், தமிழ் - முஸ்லிம் தரப்புக்களுக்கிடையில் மூதூரில் இடம்பெற்றுள்ள வன்முறை - இணக்கப் பேச்சுவார்த்தையில் சீரற்றதன்மையை ஏற்படுத்தியிருக்கிறது. இதிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதீத கோரிக்கைகள்- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிருப்தி நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் அமைச்சர் எச்.எம். அஷ்ரப் இவ்வாறான அதீத கோரிக்கைகளை முன்வைத்தார் என்ற விடயம் அப்போது பதவியில் இருநத பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜனாதிபதிக்கும் அதிருப்தி நிலையை உண்டு பண்ணியதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஹக்கீம்

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள், அதே நேரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன அரசாங்கத்துடன் கொண்டுள்ள உறவுகள், அதில் நிலவும் சாதக, பாதக நிலைப்பாடுகள் என்பன ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் தளம்பல் தன்மையை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தைக் கொண்டுவந்துள்ளன.

கடந்த வாரம் தமிழ் - சிங்களப் புத்தாண்டு இரண்டாவது வருடமாகப் போரற்ற சூழ்நிலையில் கொண்டாடப்பட்டமையால் - ஜனாதிபதியும், பிரதமரும் தமது விடுமுறையைப் பெரும்பாலும் நுவரெலியாவில் கழித்தனர். இதற்குள் தேசிய அரசியலில் ஏற்பட்ட நகர்வுகள் எதனையும் தீவிரமாகச் சிந்திக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கவில்லை. எனினும், அரசாங்கத் தரப்பும், ஜனாதிபதியின் தரப்பும் முன்னையகாலத்தில் ஆரம்பித்த பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தன.

அமைச்சர் மிலிந்த மொறகொட- அமெரிக்காவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடி நிகழ்வில் பங்கு கொண்டார். வழமையாக அமெரிக்கா செல்லும் பழக்கத்தைக் கொண்டுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட, இந்தத் தடவை பலமுக்கிய சந்திப்புக்களை அமெரிக்காவில் நடத்தியிருந்தார். இதில் முக்கியமானது - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுடனான சந்திப்பாகும். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் 'ரோக்கியோ' கூட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளை பங்கு பெறச்செய்து, இலங்கைக்கான நிதி உதவிகளைக் கூட்டுவதே இந்தச் சந்திப்பின் பிரதான நோக்கமாகும்.

சந்திப்பின் பின்னர் மிலிந்த மொறகொட வெளியிட்ட கருத்தின்படி - கோபி அனான் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம்வகிக்கும் நாடுகள் பலவற்றைப் பங்குகொள்ளச் செய்வதற்கு இணக்கம் தெரிவித்தார் எனத்தெரியவந்தது. கோபி அனானின் இலங்கை விஜயம் தொடர்பாகச் சற்று நினைவூட்டுதல் பொருத்தமானதாகும். இந்த வருட ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட செய்தி ஒன்றின்படி, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் - இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விஜயத்தின்போது அவர் வடக்குக்கு விஜயம் செய்யும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது. ஆனால், உடனடியாக இதற்கு மறுப்பு வெளியிடப்பட்டிருந்தது. கோபி அனான் - இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்திருப்பதாக வெளியான செய்தி, ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவரால் - இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அந்தச் செய்தியை அரசாங்கத்தின் நன்மதிப்பைக் கூட்டுவதற்குப் பயன்படுத்த விரும்பிய இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சு, எவ்வித உறுதிப்பாடும் இன்றித் திகதியையும் குறிப்பிட்டு கோபி அனான் இலங்கை வருவதாக அறிவித்துவிட்டது.

பின்னர், இது தவறான விடயம் என்பதை இருதரப்பும் ஏற்றுக்கொண்டன. இது முன்னர் இடம்பெற்ற சம்பவம் என்றபோதிலும், அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தத் தடவை கோபி அனானைச் சந்தித்தவேளையில், இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு எதனையும் விடுத்தாரா? என்ற எந்த விடயமும் செய்தியாக வெளியாகவில்லை. எனினும், கோபி அனான் - இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் விரிவான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டார் என அரசாங்கம் செய்தியை வெளியிட்டமை, அதன் சமாதானம் என்ற போக்கில் சிறிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

மறுபுறத்தில், அமைச்சர் மிலிந்த மொறகொட உதவிவழங்கும் முன்னணி அமைப்புக்களான உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் தலைவர்களைச் சந்தித்து உரையாடியமை, பின்னர் வொஷிங்ரனில் இடம்பெற்ற உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்று, நாட்டிற்குச் சாதகமான நிதிச்சூழலை ஏற்படுத்தியமை என்பன அமைச்சர் மிலிந்த மொறகொடவின் தனிப்பட்ட அரசியலிலும் முன்னேற்றத்தைக் கொடுத்துள்ளது.

இந்தியாவை எப்படியாவது 'ரோக்கியோ' மாநாட்டில் பங்கேற்க வைக்கவேண்டும் என்ற இலங்கையின் முனைப்புச் சாதகமாக அமையாது எனத் தெரியவந்ததையடுத்தே, அமெரிக்க முன்னோடி மாநாட்டில் அந்த நாட்டைப் பங்குகொள்ள வைக்க, இலங்கை அரசு தீர்மானத்தை எடுத்தது. அதனடிப்படையிலேயே, அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன், தமிழீழ விடுதலைப் புலிகளை அதில் பங்கேற்கவைப்பதில்லையென்ற ஏற்பாட்டையும் இலங்கை அரசு ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள முடியும்.


தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து நாட்டின் போர் முனைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக வெளிநாடுகளுக்குக் கூறுவதன் மூலம், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கைப் புனரமைக்கும் அதேநேரம், தென்னிலங்கையையும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கை அரசாங்கம் பிரதானமாகக் கொண்டுள்ளது.

இந்தநிலையில் - தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து, அமெரிக்க முன்னோடி மாநாட்டில் பங்கேற்றமை இலங்கை அரசாங்கத்திற்கு சற்றுச் சங்கடநிலையை உண்டாக்கியது. எனினும், இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்ற கோணத்தில் அரசாங்கம் மாற்று நகர்வுக்கு வாய்ப்பளித்தது.

இது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஜனாதிபதியின் விமர்சனத்துக்கும் முற்றுப்புள்ளியை வைத்தது எனக்கொள்ளலாம். அமெரிக்க முன்னோடி மாநாட்டில் இந்தியா பங்கேற்றிராவிட்டால் - ஜனாதிபதியும் அவரது கட்சியினரும், அதனைத் தமது பிரசாரத்திற்குப் பக்கபலமாக எடுத்துக் கொண்டிருப்பர். அயல்நாடான இந்தியாவை உரியமுறையில் இலங்கை அரசு மதிக்கவில்லை என ஜனாதிபதி குற்றம் சுமத்தக்கூடிய வாய்ப்பிருந்தது. இந்தநிலையில், இந்திய ராஜதந்திரி ஒருவரின் கருத்தை இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாகும். அமெரிக்க முன்னோடி மாநாட்டில் பங்குகொண்டமையைக்கொண்டு - இலங்கை நடைமுறைச் சமாதான முன்னெடுப்புக்கு இந்தியா ஆதரவு வழங்குவதாக அர்த்தமில்லை. இந்தியா அப்படி ஆதரவு வழங்குவதாக இருந்தால், உயர்நிலை அமைச்சர் ஒருவரையோ அல்லது முக்கிய இராஜதந்திரியையோ அமெரிக்காவின் முன்னோடி மாநாட்டுக்கு அனுப்பியிருக்கும்.

ஆனால், இந்தியா - அமெரிக்காவில் இருக்கும் தமது உயர்ஸ்தானிகரையே இந்த மாநாட்டில் பங்கேற்கச் செய்தமை நடைமுறைச் சமாதான முன்னெடுப்புக்கு அந்த நாட்டின் ஒத்துழைப்பின்மையை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்திருப்பதாக இந்திய இராஜதந்திரி கூறியதாக 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்கிடையில், மூதூரில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதற்குக் காரணமாக இருந்ததெனக் கூறப்படும் இரண்டு முஸ்லீம் இளைஞர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக இதுவரை உண்மைத் தகவல் வெளியாகவில்லை. எனினும், தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் நீண்டகாலமாக நிலவி வந்த ஒற்றுமை இந்த மோதல்களின் மூலம் தகர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிலையில், நிலைமையைப் பார்வையிடச்சென்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் - அங்கு தமது அரசியல் உறுதித்தன்மையைப் பரீட்சித்துப் பார்க்கும் கணிப்பீட்டில் ஈடுபட்டிருக்கிறார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை - ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் விமர்சித்தார் என்ற காரணத்தை முன்வைத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேரடியாக வருமாறு கேட்கும் அளவிற்கு ரவூப் ஹக்கீமின் பரீட்சைக் களம் விரிவுபட்டிருக்கிறது.



மிலிந்த

ரவூப் ஹக்கீமின் பரீட்சைக் களத்திற்கு வாய்ப்பைத் தரத்தயாராகப் பிரதமர் இல்லாதபோதும், நடைமுறை அரசியல் ஸ்திரத்தன்மையைக் கருத்திற்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைகளுக்கு இணங்கவேண்டிய கட்டாயத்துக்கு உட்பட்டுள்ளார். எனினும், அதிகாரம் தொடர்பில் தமக்கு வாய்ப்பு ஒன்று வரும்வரையில் அவர் காத்திருக்கிறார் என்பதைச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் உணர்ந்திருக்கிறது என்பது தெளிவு. நடைமுறை பரீட்சைக்களத்தில் ரவூப் ஹக்கீம் வெற்றிபெற்றால், அதன்மூலம் மூதூர் மற்றும் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் மத்தியில் அவருக்குச் செல்வாக்கு மேம்படக்கூடும்.

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

மறுபுறத்தில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விட்டுக்கொடுப்பில், மேலும் ஒருபடி கீழிறக்கம் ஏற்பட்டதாகத் தென்னிலங்கையில் கருத்துக்கள் பரவக்கூடும். இந்தச் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - தமக்கு உறுதுணை புரியும் எனப் பிரதமர் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளார். ஆனால், அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான முன்னெடுப்பு முன்னேற்றத்தைக் கருத்திற்கொள்வதாகவே அமைந்திருப்பதை அவர் அறியாமல் இல்லை.

ஒருபுறம் சர்வதேச நிதி உதவி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணங்கிப்போகவேண்டிய சூழ்நிலை, ஆளும் கட்சியில் இருப்பவர்களைத் திருப்திப்படுத்துவது, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மாற்றுக் கட்சியினரைக் கவனித்துக் கொள்கின்றமை என்ற நான்குமுனைப் போராட்டத்தில் தற்சமயம் பிரதமர் ஈடுபட்டுள்ளார். இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு, சமாதான முன்னெடுப்பில் நம்பிக்கை இழக்கும்வரை தொடரும் என்பது நிச்சயம். மாற்றுக் கட்சிகளைப் பொறுத்தவரையில் அரசாங்கம் அமைக்கக் கூடிய வல்லமை எவருக்கு இருக்கிறதோ அங்கு செல்வதே அவற்றின் நோக்கமாகும்.

இதற்கு அப்பால், பிரதமரின் அரசியலுக்கு முழுமை அச்சுறுத்தலாகத் தற்சமயம் ஜனாதிபதியே இருந்து வருகிறார். மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து அவர் மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கப்போவதாக அச்சுறுத்தும் பாணி - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைப் பயப்படவே செய்துகொண்டிருக்கிறது. எனினும், சர்வதேச ஆதரவு அந்தப் பயத்தைச் சற்றுக் குறைவடையச் செய்துகொண்டிருக்கிறது. எது எப்படியிருப்பினும், ஜனாதிபதி தமது முனைப்பை ஒவ்வொரு கட்டத்திலும் கூர்மைப்படுத்தி வருகிறார். இதற்காக அவர், தமக்குச் சார்பான நாடுகளாகக் கருதும் நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறும் முயற்சியில் இறங்கியுள்ளார். இதன் முதலாவது கட்டமாக - அவரின் இந்திய விஜயம் அமைந்திருந்தது. தற்சமயம் அந்த விஜயம் பங்களாதேஷுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது குறிப்பாக, அவரின் பார்வை தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளைக் குறிவைத்துச் சென்றுகொண்டிருக்கிறது.

இதன் பின்னணி விரைவில் வெளிவரும் என்றே அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். ★

---

# சாவு வீழ்ந்தது! வெற்றி பிறந்தது!

*"அவர் அவர்களிடம், "திகிலுற வேண்டாம்" சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் இங்கே இல்லை, இதோ அவரை வைத்த இடம்"* (மாற்கு -16:6)

இன்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஈஸ்ரர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். மரித்த இயேசுகிறிஸ்து வெற்றி வீரராக, மரணத்தை வென்று உயிர்த்த நாளையே ஈஸ்ரர் தினமாக இன்று திருச்சபை நினைவு கூருகின்றது.



இயேசுகிறிஸ்து உயிர்த்த அன்றைய தினமே, "அவர் உயிர்த்தெழவில்லை, அவருடைய சீடர்கள் அவருடைய உடலை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்" என்ற பொய்யுரை பிரசாரத்தை, பிசாசான் யூத மதத் தலைவர்களைக் கொண்டு ஆரம்பித்து வைத்தான். அன்றிலிருந்து இன்றுவரை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு எதிராகக் காலத்திற்குக் காலம் மதத் தலைவர்களைக் கொண்டும், போலி உபதேசக்காரர்களைக் கொண்டும், பல்வேறு வடிவங்களில், வகைகளில் போதனைகளை அவன் ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றான்.

இன்றுவரை வெறுமையாக இருக்கின்ற - அவரை அடக்கம் செய்த கல்லறை, உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்ட சாட்சிகள், உரோமைய வரலாறு போன்ற பல சான்றுகள், இயேசுவின் உயிர்த்தெழுதலை நிரூபிப்பதாக இருக்கின்றன.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை இந்த உலகத்துக்கு நிரூபித்துக் காட்டக்கூடிய உயிருள்ள சான்று கிறிஸ்தவனே. கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே. நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவர்களாவீர்கள் (1கொரிந்தியர் -15:17) எனத் திருத்தூதர் பவுல் குறிப்பிடுகிறார்.

ஆகவே - கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலேயே பாவங்களிலிருந்து நாம் ஒவ்வொருவரும் விடுதலையடைந்திருக்கின்றோம்.

எம்முடைய பாவங்களில் நாம் தொடர்ந்து இராதபடி எம்மை உயிர்ப்பித்தது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே. ஆகவே, பாவங்களிலிருந்து விடுதலை பெற்றவனின் வாழ்க்கை கிறிஸ்துயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றது.

## அல்லேலூயா....

எனவே, இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நம் அனைவரின் வல்லமை, ஒரு மாபெரும் கொடை. வாழ்வுக்கு எதுவுமே இனித்தடை விதிக்கமுடியாது. வாழ்வின் முழுமை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற எதிர்நோக்கு நம்மை மகிழ்விக்கின்றது. இந்தக்கொடையை நாம் முழுமையாக நமதாக்கிக்கொள்ள, அன்பில் கனிந்தவர்களாய் இருக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் தனிப்பட்ட அன்பர்களாய் மாறவேண்டும். இந்த அன்பின் ஆழத்திலேயே நம்பிக்கை வேர்விடும்.

சீமோன் பேதுரு - கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பை எவ்வாறு உணர்ந்தாரோ, அதேபோன்று அன்பின் ஆழத்தில் அவர் உயிர் பிரசன்னத்தை நாமும் உணர்ந்து, இன்று கிறிஸ்து உயிர்த்தார் என்று ப்ாடும் நாம் - அந்த உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக, உயிர்த்தெழுதலை நிரூபிக்கின்ற ஜீவனுள்ள சான்றாக விளங்கும்படி எம்முடைய பாவங்களிலிருந்து விடுதலை பெற்று வாழ்வோமாக.


*சி.என்.ஹெய்ன்ஸ்*

# அமெரிக்காவை வெளியேறுமாறு கோரி இலட்சக்கணக்கில் ஈராக்கியர் பேரணி

(பக்தாத்)

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் உடனடியாக வெளியேறவேண்டும் எனக்கோரி, கடந்த வெள்ளியன்று பக்தாத்தில் ஈராக்கியப் பொது மக்கள் திரண்டு மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

வெள்ளி தொழுகையின்பின் லட்சக்கணக்கில் திரண்ட சுனி மற்றும் ஷியா முஸ்லிம்கள், ஆக்கிரமிப்பைக் கைவிட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறவேண்டும் எனக் கூச்ச



லிட்டவாறு மிகப்பெரிய பேரணியை நடத்தினர்.



பக்தாத் பேரணியில் திரண்ட ஈராக்கியப் பொதுமக்கள்

பெருமளவில் ஈராக்கியப் பெண்களும் இதில் கலந்துகொண்டனர். சில இடங்களில் ஊர்வலத்தில் சென்றவர்களோடு, அமெரிக்கப் படையினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சதாம் இல்லாத ஈராக்கில் இவ்வளவு, அதிகளவில் ஈராக்கியர் திரண்டது குறித்து மேற்குலக செய்தியாளர்கள் அதிசயித்துள்ளனர்.

இதேவேளை -

சதாமின் ஆட்சி கவிழ்ந்துவிட்ட நிலையில், இனி அங்கு அமெரிக்காவிற்கு வேலை ஏதுமில்லை. உடனடியாக வெளியேறவேண்டுமென, ஈராக்கின் அயல்நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஈராககின் எண்ணெய் வளத்தை அமெரிக்கா அபகரிக்கக் கூடாது என்றும், அவை கோரியுள்ளன.

இதேவேளை - ஈராக் சிவில் நிர்வாகத்தை தற்போது அமெரிக்கப் படைகள் ஏற்று, பூர்வாங்கப் பணிகளையும் ஆரம்பித்துள்ளன.

# ஈராக்கிய நிதியமைச்சர் பொலிஸாரால் கைது!

ஈராக்கின் முன்னாள் நிதியமைச்சரை, ஈராக்கியப் பொலிஸார் பக்தாத்தில் வைத்து கைதுசெய்து அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

அல் - அஸாவி என்ற இவர், அமெரிக்காவால் தேடப்படும் 55 ஈராக்கியத் தலைவர்கள் பட்டியலில் 45 ஆவது நபராக இருப்பவர்.

இதுவரை இப்பட்டியலில் உள்ளவர்களில் ஐவர் அமெரிக்கப் படைகளிடம் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பட்டியலில் 24 ஆவதாக இருக்கும் சமிர் அல் அசிஸ் அல் நஜீம், 51 ஆவது நபராக உள்ள வட்பான் இப்ராஹிம் அல் - திக்ரிதி, 52 ஆவதாக உள்ள பர்சான் இப்ராஹிம் அல் திக்ரிதி, 55 ஆவது நபரான ஜெனரல் அமிர் அல்சாடி (சரணடைந்தவர்) ஆகியோரே அமெரிககப் படைகளால் கைதானவராவர்.



இதேவேளை - பக்தாத்தில் நடவடிக்கைகளை முடித்துக்கொண்ட அமெரிக்க சிறப்புப் பிரிவான மரைன் படையினர், பக்தாத்தின் பாதுகாப்புப் பொறுப்பை அமெரிக்க நிரந்தரப் படைப்பிரிவிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஈராக்கிய சிறைகளில் உள்ள 900 கைதிகளை விடுவித்த அமெரிக்கப்படைகள், சுமார் 6,850 ஈராக்கியரை தமது கைதிகளாக கைது செய்து வைத்துள்ளனர்.

# காணாமற்போயுள்ள ஈராக்கின் கலைப்பொருட்களை தேடி வேட்டை

10 ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த, தொன்மை வாய்ந்த பொருட்கள், பக்தாத்தின் அருங்காட்சியகத்திலிருந்து திருடப்பட்டுவிட்டன. இந்த அரும் பொருட்களை இப்போது தேடும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட இப்பொருட்களை கண்டறியும் பொருட்டு சர்வதேச பொலிஸான இன்ரபோல், தனது கலைப்பொருள் தேடுதல் குழுவை ஈராக்கிற்கு அனுப்பி வைக்கவுள்ளது. இவர்களுக்குத் துணையாக அமெரிக்கப் புலனாய்வுப்பிரிவான எவ்.பி.ஐ. அதிகாரிகளும் செல்லவுள்ளனர்.

இன்ரபோல் தனது கிளைகள் உள்ள 181 நாடுகளுக்கும் கலைப் பொருட்கள் கடத்தல் சம்பவங்கள் ஏதும் நடைபெறுகிறதா என்பதைக் கண்டறியுமாறு பணித்துள்ளது. எல்லைகளூடாக இவை எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க நாடுகளின்எல்லைகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு கடத்



சிதைவுற்ற புராதன சிலை

தல்காரர்களின் ஊக்குவிப்பினாலேயே பக்தாத் அருங்காட்சியகம் கொள்ளையிடப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது. புராதன சிலைகள், ஏடுகள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளமை பெரும் உணர்வலையை நாடுகளிடையே ஏற்படுத்தியுள்ளது.

அருங்காட்சியகக் கொள்ளையை தடுக்க அமெரிக்கா தவறிவிட்டதாகக் கண்டித்து வெள்ளை மாளிகையின் மூன்று கலாசார அதிகாரிகள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

பக்தாத் அருங்காட்சியகம் மட்டுமல்ல, மொசூல்



வெறிச்சோடிய அருங்காட்சியகம்


இஸ்லாமிய நூலகமும் அழிக்கப்பட்டுள்ளது. புராதன ஏடுகளும் மற்றும் உலகிலேயே ஆதியான குரான் நூலின் பிரதி என்பன தீயில் கருகிவிட்டன. 1991 வளை குடாப்போரின்போதும் பெரும் கலைப்பொருட்கள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உலகின் மிகப்புராதன 80 ஆயிரம் ஏடுகள், நாலாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த அகாடியன் மன்னனின் வெண்கலச்சிலை, அதேகாலப் பகுதியின் உர் நகரின் வெள்ளிக்கோல், ஐயாயிரம் வருடங்கள் பழமையான மூன்றடி உயர வேலைப்பாடுகளுடன் கூடிய சுமேரியன் பூச்சாடி, இதே காலப்பகுதியைச் சேர்ந்த தலையற்ற சுமேரியன் அரசன் எந்தீமீனாவின் சிலை, கலை வேலைப்பாடுகள் நிறைந்த புனிதக் கோப்பை என்பன கொள்ளையிடப்பட்ட புராதன சின்னங்களில் சிலவாகும்.

இதனிடையே பக்தாத் மிருகக்காட்சிச் சாலையில் உள்ள விலங்குகள் உணவின்றி இறந்து வருவதையடுத்து, சர்வதேச விலங்கியல் குழுவொன்று குவைத்திலிருந்து பக்தாத் செல்ல முயன்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகவலம்

# சதாமின் விடியோ காட்சி; மீண்டும் சர்ச்சை எழுந்தது



(வொஷிங்ரன்)

அமெரிக்கப் படைகள் பக்தாத்தின் மத்தியில் சதாம் ஹுசைனின் உருவச் சிலையை உடைத்து வீழ்த்திக்கொண்டிருந்த சமயம், நகரின் மறுபுறத்தில் பொதுமக்கள் மத்தியில் சதாம் காணப்பட்ட விடியோப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. ஏப்ரல் 9 ஆம் திகதி எடுக்கப்பட்ட இந்த விடியோக்காட்சி நேற்று முன்தினம் உலகெங்கும் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாகின.

இந்த விடியோப்படத்தில் காணப்படும் சதாமும் அருகில் காணப்படும் அவரின் இளைய மகனும் உண்மையில் அவர்கள்தானா அல்லது அவர்களைப் போன்று உலவவிடப்பட்ட 'போலிகளா' என்பது குறித்து அமெரிக்க புலனாய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

ஏப்ரல் 9 ஆம் திகதி தமது விமானத்தாக்குதலில் சதாம் பலியானதாக அமெரிக்கா கூறிவரும் நிலையில், இந்த விடியோப் படக்காட்சி வெளியாகியுள்ளது. இனந்தெரியாத ஒரு நபரே இந்த விடியோப் பிரதியை அபுடுபாய் தொலைக்காட்சி நிறுவனத்திடம் கையளித்துள்ளார்.

இந்த விடியோவில், சதாம் ஒரு கட்டத்தில் கார் ஒன்றின் மீது ஏறி, கரகோஷம் செய்யும் மக்களுக்கு சல்யூட் அடிக்கும் காட்சியும் காணப்படுகிறது. இக்காட்சி தூரத்தில் நின்று எடுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது.

வடக்கு பக்தாத்தில் உள்ள அசாரியா பகுதியில் இப்படம் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. எனினும், இந்த விடியோவில் காணப்படும் சதாம், சில வாரங்களுக்கு முன்பாக தொலைக்காட்சிகளில் தோன்றிய சதாமை விட இளமையாகவும், மெல்லியவராகவும் காணப்படுவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

# திருமலையில் அன்னை பூபதிக்கு அஞ்சலி நிகழ்வு







தியாகி அன்னை பூபதியின் 15 ஆவது நினைவுதினம், திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவட்ட அரசியல் பணிமனையில் நேற்று சனிக்கிழமை நினைவு கூரப்பட்டது. பொதுச் சுடரினை மாவீரர் சங்கிலியின் தாயார் ஏற்றி வைப்பதையும், நகர அரசியல் பொறுப்பாளர் மதி தேசியக் கொடியினை ஏற்றி வைப்பதையும், ஈகச் சுடரினை கேணல் கிட்டுவின் மாமியார் திருமதி செல்வின் ஏற்றி வைப்பதையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அதிரடிப்படைக்குப் பயிற்சி; இத்தாலி அரசு இணக்கம்!

## முதற்கட்டமாக 50 படையினர் பயணம்

விசேட அதிரடிப்படையினருக்கு இத்தாலியில் வைத்து பயிற்சியினை வழங்குவதற்கு அந்நாட்டரசு முன் வந்துள்ளது.

இத்தாலிய அரசின் முழுமை யான செலவினத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சியில், முதற்கட்டமாக 50 அதிரடிப்படையினர் பங்குகொள்ள வுள்ளனர் என, விசேட அதிரடிப்படை யின் உயரதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ நாடுகளில், இத்தாலியின் பொலிஸ் படையே மிக நவீன மயப் படுத்தப்பட்டிருப்பதுடன், சர்வதேச ரீதியான குற்றச்செயல்களைத் தடுப் பதிலும் விசேட திறமையைக் கொண்டிருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அண்மையில் இந்தப் பயிற்சி உதவி தொடர்பாக நடந்த கலந் துரையாடலில், இலங்கைக்கான இத் தாலியத் தூதுவர், அமைச்சர் மிலிந்த மொறகொட, பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் ரவி ஜெயவர்த்தன, பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா, உள்துறையமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட், விசேட அதிரடிப் படையின் பிரதித் தளபதியா[illegible] சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சக[illegible] நிமால் லெவ்கே ஆகியோர் ப[illegible] கேற்றிருந்தனர்.

# இந்திய மீனவருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குக

## பொலிஸாருக்கு சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர் களுக்கு எதிராக, கடும் நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் பொலி ஸாருக்குப் பணிப்புரை விடுத்துள் ளார்.

இந்திய மீன்பிடி இழுவைக் கப் பல்கள், இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருப்பதாலேயே, இந்த உத்தரவினை சட்டமா அதிபர் ஏ.சி.கமலசபேசன் அறிவித்துள்ளார்.

இத்தகைய அத்துமீறலில் ஈடுப டும் இந்திய மீனவர்களைக் கைது செய்யுமாறு, பிராந்தியங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களிடம் தாம் பணித்துள்ளதாகவும் கமல சபேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

# தாய்லாந்துப் பேச்சுகள் ஒத்திவைக்கப்படலாம்?

தாய்லாந்தில் இம்மாத இறுதியில் நடைபெறுவதாக இருக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஒத்திவைக்கப்படலாமெனவும், தாய்லாந்தில் 'சார்ஸ்' நோய் பரவிவரும் சூழலில் - தமது தலைமைப் பேச்சுவார்த்தை யாளர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டு இது தொடர்பாக நோர்வேத் தரப்பிடம் விடுதலைப் புலிகள் இதுபற்றிய கோரிக்கையை முன்வைத்திருப்பதாகவும் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, வொஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்கப்படாததால் ஜப் பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவது பற்றி மறுபரிசீலனை செய்யப்போவதாக அறிவித்திருக்கும் விடுதலைப் புலிகளுடன் ஒரு சமரசத்திற்கு வர புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை இந்த வாரத்தினுள், நோர்வே மத்தியஸ்தர்கள் லண்டனுக்குச் சென்று சந்திக்கவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# பிரிட்டிஷ் ஜெனரல் ரோஸ் மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

பிரித்தானிய இராணுவத்தின் முன்னாள் உயர் தளபதி ஜெனரல் மைக்கல் ரோஸ், நேற்று மட்டக் களப்புக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயம், மட்டக்களப்பிற் கான அவரது இரண்டாவது வரு கையாகும். விசேட ஹெலிகொப்ரர் மூலம் கொழும்பில் இருந்து விஜயம் செய்த இவர், மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள 233 ஆவது இராணு வப் படைப் பிரிவு தலைமையகத் தில் இராணுவ உயரதிகாரிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

போர்நிறுத்த உடன்படிக்கைக் குப் பின்னர் ஏற்பட்டுள்ள நிலை மைகளில் தற்போதுள்ள முன் னேற் றங்கள் குறித்து அறிந்து கொள் ளும் நோக்கமாகவே, இவரின் தற் போதைய விஜயம் இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனரல் மைக்கல் ரோஸின் அறிக்கையை பாதுகாப்பு வலய மீளமைப்பு விவகாரத்திலும் அரசாங் கம் எதிர்பார்த்திருப்பது குறிப்பிடத் தக்கது.

## வன்முறைச் சக்திகளை....

தலைவர்களுக்கும் எமது நிலைப் பாட்டை நாம் உறுதியாகத் தெரிவித திருந்தோம். இச்சம்பவத்துக்கும் எமக்கும் தொடர்பில்லையென துண் டுப்பிரசுரங்கள் மூலமும், பத்திரிகை கள் மூலமும் தெளிவாகக் கூறி யிருந்தோம்.

நாம் இவ்வாறு அறிவித்த பின்ன ரும், எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்களது போக்குவரத்துப் பாதை, உணவு விநியோகம் ஆகி யவற்றை முஸ்லிம் மக்கள் தடுத்த னர். இந்தநிலை, ஐந்து ஆறு தினங் களாக நீடித்தது. இதற்கிடையில் அரசியல் லாபம் தேடும் ஒரு குழுவி னர், தமிழ் முஸ்லிம் மக்களிடையே பதற்ற நிலையைத் தூண்டிவிட்ட தன் பயனாக தமிழ் மக்கள் தாக் கப்பட்டனர். அவர்களது உடமை கள் அழிக்கப்பட்டன. இந்த நிலை யில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக் களும் தாக்குதல் நடத்த முற்பட் டார்கள்.

நாங்கள் இவர்களைப் பொறு மையாக இருக்குமாறு கேட்டுக் கொண்டோம். ஏப்ரல் 18 ஆம் திகதி மூதூர் கிழக்குக்கான பாதையைத் திறக்குமாறு கோரி, கட்டைபறிச் சான் முகாமுக்கு முன்னால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதே வேளை, கட்டைபறிச்சான் இராணுவ முகாமுக்குள் அமைச்சர்கள், படை உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கிடை யில் சந்திப்பு நடைபெற்றுக்கொண்டி ருந்தது.

அவ்வேளை - ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது முஸ்லிம் மக் கள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர். இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டார். இதில் இரு தமிழர்கள் கொல்லப்பட்டனர். 14 பேர் காயம டைந்தனர்.

அமைச்சர், படையதிகாரிகள் இருந்தவேளையில் நடத்தப்பட்ட இத்தாக்குதல், எமது மக்களை மிக வும் அதிர்ச்சியடைய வைத்துள் ளது. இத்தாக்குதலை நாம் வன்மை யாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான தாக்குதல், தற் போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கக்கூடியதாக இருக்குமென நாம் கருதுகிறோம். தமிழ், முஸ்லிம் மக்கள் - மூதூரில் நிலைகொண்டு குழப்பத்தை ஏற்படுத்தும் சக்திகளை இனங் கண்டு, அவர்களின் பொய்ப்பிரசாரங் களை நிறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் அசம்பாவிதங்களின் போது கொல்லப்பட்ட மற்றும் காயம டைந்த, உடமையிழந்த மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

## அரசிலிருந்து

புலிகள் முற்படுகின்றனர். இது அவர்களுக்குரிய வேலையல்ல. இதனை அரசாங்கமே பார்க்கவேண் டும்.

நடந்த சம்பவங்கள் அமைதி முயற்சிகளுக்குத் தீவிரமான பாதிப் பைத் தருவதாக அமைந்து விடக் கூடாதென்பதே எமது விருப்பம்.

நான் தாய்லாந்துக்குச் செல்லத் தான் போகிறேன். விடுதலைப் புலி கள் என்னை - முஸ்லிம் காங்கிர ஸின் தலைவராக அங்கீகரித்தே இருக்கிறார்கள் என்றார்.

## நாம் பலமாக...

வெளியிடுகையில் -

நாம் இன்றைய எமது பலத்தை வைத்து சமாதானச் சூழ்நிலையை குழப்புவோம் என்று நீங்கள் எதிர் பார்க்க வேண்டாம். ஆனாலும், எமது வரலாறுகளைப் புரட்டிப் பார்ப்போமா னால், எத்தனை உடன்படிக்கைகள் இவ்வாறு திசைமாறின என்பது தெரி யும்.

தற்போது யாழில் பல சட்டவி ரோதச் செயல்கள் இடம்பெறுவதாக பத்திரிகை வாயிலாக அறிகின் றோம். இவற்றை நாங்கள் உன்னிப் பாக அவதானித்து வருகிறோம். தொன்மையான எமது கலாசா ரத்தை எவரும் சீரழிக்கவிடாது தடுப்பது அனைவரதும் கடமை யாகும். இதற்கு நாமும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார்.

## பிரதமர்...

தொடர்ந்தும் தங்கியிருப்பதே வன் முறைக்குக் காரணம் எனவும், அவரை அங்கிருந்து விலகுமாறும் ஏனைய முஸ்லிம் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

ஓரிரு தினங்களில் திருமலை செல்லும் பிரதமர், தாம் அமை தியை ஏற்படுத்த எடுத்துவரும் முயற்சிகள் குறித்து ஹக்கீமிடம் விளக்கவுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

## ஆனையிறவு...

ளும் இடம்பெறுவதுடன் கனரக ஆயுதக் கண்காட்சியும், போராளிக் கலைஞர்களின் எழுச்சி நாடகங்க ளும் இடம்பெறும்.

இதேவேளை - ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டியும், தீச் சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழாவையொட்டி யும், தமிழீழ விளையாட்டுத் துறை யினரால் - ஆண்களுக்கான நீண்ட தூர துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வீரர்கள்- தங்கள் பதிவுகளை, தமிழீழ விளை யாட்டுத்துறை நடுவப்பணியகத் திலும், யாழ்.மாவட்டத்தில் பொற் பதியில் உள்ள மாவட்ட அரசியற் துறை அலுவலகத்திலும், எதிர் வரும் சனிக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ள னர்.

இந்நிகழ்வில் பங்குபற்றி வெற்றி யீட்டுபவர்களுக்கு, பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# புலிகள் - முஸ்லிம் தலைவர்கள் இன்று திருமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

திருமலையில், தமிழ் - முஸ்லிம் இனத்தவரிடையே மூண்டுள்ள பதற் றமான சூழலைத் தணிக்குமுகமாக, இன்று திருமலை நகரில் முக்கிய சந்திப்பொன்றை, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒழுங்குசெய் துள்ளதாக, அதன் பேச்சாளர் ரெய் ரூர் ரொகில்சன் அறிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பா ளர் திலக், முஸ்லிம் மதத் தலை வர்கள், மூதூர்ப் பகுதி சமூகத் தலைவர்கள் ஆகியோரின் பங்கேற்பு டன், திருமலை மாவட்ட கண்கா ணிப்புக் குழுத் தலைவர் அப்ரெல் புர்கான் தலைமையில் இச்சந்திப்பு நடைபெறவிருக்கிறது.

இதேவேளை -

திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி பதுமனுக்கும், திருமலை மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பொன்றும் நாளை நடைபெறவிருக்கிறது.

இச்சந்திப்பில், போராளிகளி[illegible] நடமாட்டம் பற்றி ஆராயப்படுமெ[illegible] கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

## பொதுஅமைப்புக்கள்....

மாவீரர் அம்பிகைவாணனின் தந்தை து.தவராசா ஏற்றிவைத்து, அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கம் இடம் பெற்றது.

பின்னர், வலிகாமக் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் சாம்பசிவம், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் உட்படப் பலர் உரையாற்றி னர்.

மதியம் - புலிகளின் குரல் நிறு வனப் பொறுப்பாளர் தமிழன்பன் உரையாற்றினார். பின்னர் - யாழ். பலநோக்கு கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் குளிர் பானம் வழங்கி அடையாள உண் ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

மாலை நிகழ்ச்சிகள் - யாழ்ப் பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனின் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் - வர வேற்புரையினை, யாழ். பல்கலைக் கழக மாணவி யாழினி நிகழ்த்தி னார். நினைவுரையினை, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார். மகளிர் அரசியற்து றைப் பொறுப்பாளர் தமிழினி சிறப் புரையாற்றினார்.

பருத்தித்துறை சிவன்கோவில் முன்றிலிலும் தியாகி அன்னை பூபதியின் அஞ்சலி நிகழ்வு, வடம ராட்சி வெகுஜன ஒன்றியத் தலை வர் செபஸ்ரியன் தலைமையில் நடைபெற்றது.

ஈகச்சுடரை, வடமராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் ஏற்றி வைத்தார்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்தை, மாவீரர் ஒருவரின் பெற் றோர் திரைநீக்கம் செய்துவைத்த னர். ஈகச்சுடரை, பா.தாட்சாயினி, வடமராட்சி கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் யமுனா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மகளிர் பிரிவைச் சேர்ந்த கல் யாணி திருவுருவப்படத்துக்கு மலர் மலையை அணிவித்தார்.

**மன்னார்**

மன்னாரில் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு நேற்று எழுச்சி யுடன் நடைபெற்றது. மன்னார் நகர சபை மண்டபத்தில் தேசிய எழுச் சிப்பேரவையைச் சேர்ந்த அன்ரனி மார்க் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மன்னார் பேசாலையிலும் அன்னை பூபதியின் நிகழ்வுகள் நடைபெற்றன.

**மாங்குளம்**

மாங்குளம் பிரதேசத்தில் - அன்னை பூபதியின் நினைவுநாள் நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ் டிக்கப்பட்டது. மாங்குளம் மகாவித் தியாலய ஆசிரியை புஷ்பமாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் - ஈகச்சுடரேற்றல், தேசியக் கொடிஏற்றல், அன்னையின் திருவு ருவப் படத்துக்கு மலர்மாலை அணி வித்தல் போன்ற நிகழ்வுகளும் இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## திருமலை..

வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒரு வரும் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து, நேற்றிரவு 11 மணிமுதல் இன்று காலை 7 மணிவரை நகரில் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட் டது. நகரில் நேற்றிரவு பதற்றநிலை நீடித்ததாகவும் தெரியவருகின்றது.

(4,10)

## பாதுகாப்பு...

கடந்த சில தினங்களாக கூட்டுறவுக் கடைகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் அத்தியாவ சியமான உணவுப் பண்டங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதே வேளை - மூதூர் பிரதேச அதிகாரி கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவா ரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால், வீடுகள் அழிக்கப்பட்டிருப்பதால், தம[illegible] சொந்த இடங்களுக்குச் செல்ல[illegible] போவதில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஒப்புநோக்குநர்கள் தேவை

பத்திரிகைத்துறையில் பணியாற்றிய அனுபவம்வாய்ந்த ஒப்புநோக்குநர்கள் தேவை.
22.04.2003 காலை 11 மணிக்கு அலுவலகத்துக்கு சான்றிதழ் களுடன் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.